10வது ஆண்டில்

விளம்பரம்™
VLAMBARAM™

(416) 282-8059
(416) 282-4978

உலக தமிழோசை®
ULAKA THAMILOSZAI

சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

நதி 10 FEBRUARY 15, 2000 பாலம் 04

❊ ஒருவரின் தலையை வேறு ஒரிவரிற்கு மாற்றலாமா? (பக். 2)
❊ முதலீடாக வீடுவாங்குபவர்களின் கவனத்திற்கு (பக். 17)
❊ வாஜ்பேஜ் அரசைக் கவிழ்த்த...ரா...(பக். 12)
❊ வருடத்தில் இருதடவைகள் சூரிய, சந்திரகிரகணங்கள் தோன்றுமா? (பக்.9)
❊ அமெரிக்கா வல்லரசாகியதற்கு லூதர் கிங் காரணமா? (பக். 7)
❊ சுவாசப் பயிற்சி நோய்களைத் தடுக்குமா? (பக். 4)
❊ அவுஸ்திரேலியாவில் முதல்மூன்று சுற்றிலும் வெற்றிபெற்ற தமிழ் மகள் (பக். 6)
❊ சந்தியில் எந்த சாரதிக்கு முதல் உரிமை (பக்.13)

வீடு விற்பது, வாங்குவது

வாழ்வில் முக்கியமான செயல்களில் ஒன்று. எனவே இவை பற்றி பூரணமான இலவச ஆலோசனைகளைப் பெற அழையுங்கள்:

☎: 416-287-2183/491-4002
ராஜா எம். மகேந்திரன்
RE/MAX Crossroads Rlty Inc. sales rep.

இழந்த முடியை மீண்டும் பெற வாருங்கள்
சபோனாவிற்கு!
Sabona & Gift
☎: (416) 264-8787 ☎: (416) 269-8151
Markham / Eglinton
(கலைமகள் புத்தக நிலையத்திற்கு உள்ளே)

## அருள் விருந்து

*-செ. சிவசுப்பிரமணியம்*

- ஆத்ம ஞானம் என்னும் பாதரட்சை போட்டுக் கொண்டால் உலகம் என்னும் முள்காட்டில் தயங்காது நடக்கலாம்.
- உறுதியற்ற கயவரே பாபம் செய்கின்றனர். வீரர் யாண்டும் செயற்கரிய நல்வினை யாற்றுகின்றனர். நிறைவிலே நிலைத்திருக்கின்றனர்
- பற்று வைப்பதும் ஓரம் சார்வதும் ஒன்றே. அன்னவர்க்கு விவேகம் வளர்வதில்லை. நடுவு நிற்பவர்க்கே விவேகம் வளர்கிறது.
- தீமையைக் கொண்டு தீமையை அகற்ற முடியாது. வெளிச்சம் இருளை அகற்றுவது போன்று நலமே கேட்டை நீக்கவல்லது.
- மக்களுக்கிடையில் உயர்வு தாழ்வு பாராட டாதவன் பொறாமைப் படுவதில்லை. பொருளை மதியாதவன் திருடுவதில்லை. பொறி வழியே புலன்களில் செல்லாதவன் சஞ்சலப்படுவதில்லை

உலக நாடுகள் வரிசையில் தென் அமெரிக்க நாடுகள்

## கஜானா (GUYANA)

ஐக்கிய நாடுகள் சபையின் 1999 டிசம்பர் 31ந் திகதிக் கணக்கின் படி உலகில் இருக்கும் நாடுகளின் எண்ணிக்கை 188 ஆகும். உலகில் இருக்கும் நாடுகள் இதனை விடக் கூட ஆனால் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகள் 188 ஆகும். இந்த நாடுகளில் சனத்தொகையில் முன்னிற்கும் நாடு சீனா ஆகும். பரப்பளவில் மிகப்பெரிய நாடு ரஸ்யா ஆகும். நாம் இருக்கும் கனடிய நாடு பரப்பளவில் இரண்டாவது பெரிய நாடு ஆகும். உலகில் சனத்தொகையிலும், பரப்பளவிலும் 5வது இடத்தில் இருக்கு் நாடு பிரேசில் ஆகும். இது தென் அமெரிக்காவில் இருக்கின்றது.

பிரிட்டிஷ் ஆட்சியின் போது ஆபிரிக்காவிலும், இந்தியாவிலும் இருந்து, அகதிகளாக கப்பலில் கொண்டு வந்து குடியேற்றப்பட்ட நாடுகளில் ஒன்றே "கஜானா" ஆகும். தென் அமெரிக்காவில் கரிபியன் கடல், பிறேசில் சுறினாம் [Suriname], "வெனிசுலா' ஆகியவற்றினை எல்லையாக கொண்ட நாடாகும்.

(தொடர்ச்சி 12 பக்கம்)

## உன்னை அறிந்தால்

நெற்றிக்கண்ணனின் மூன்றாவது கண்ணைக் குற்றிய சம்பவம், தமிழனை அவமதித்த செயல். இது ஒரு திட்டமிட்ட செயல் என்றே நெற்றிக் கண்ணன் கருதுகிறான். இந்த நிலைமை தொடருமாயின் தமிழன் ஒரு கிள்ளுக் கீரையாகி விடுவான் என்பதனை யதார்த்தமாக சிந்திக்கும் யாரும் மறுக்க முடியாது. நடக்காததையே நடந்தது எனக் கூறும் இவ்வுலகம், ஒரு சிறு விடயம் நடந்தால் அதற்கு காலும் கையும் வைக்க தயங்குமா? ஒரு தவறான நாடகம் மேடையேற்றப்பட்டுள்ளது. அதன் நடிகர்களை மக்கள் இனங்கண்டிருப்பார்கள். அதற்குரிய எதிர்ப்புக்கள் பண்பான முறையில் தெரியப்படுத்தப்பட்டுள்ளன. கெட்டபெயர் எடுப்பது சுலபம். நல்ல பெயரை தக்கவைப்பது மிகவும் கடினமான செயல். இது எமது கையில் உள்ளது. எனவே எங்கள் ஒவ்வொருவரிற்கும் கடமை, கட்டுப்பாடு, கண்ணியம் மேலும் முக்கியம் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. சிந்திக்கவும்... செயல்படவும், வெற்றி நமதே!!

-நெற்றிக்கண்ணன்

விளம்பர வினாடி வினா! CTBC RADIO ✡ SUNDAYS ✡ 7:30 PM


SINGAPORE PAGING
$25.00 + Taxes 200min/Month
$100. FREE PAGER Incl. 1YEAR SERVICE
Nokia 6188 with VIB
CANTEL
Bell Mobility
$50.00 +Taxes / Month
7 a.m. - 7 p.m. 200min இலவசம்
7 p.m. - 7 a.m. கிழமை நாள் இலவசம்
Fri. 7 p.m. - Mon. 7 a.m. இலவசம்
மேலதிக நிமிடம் 12.5 சதம் மட்டுமே
Mobile Message, Call Forwarding, Call Display per second billing included.
மேலதிக விபரத்திற்கு சக்தி: (416) 745-2378
HOTLINE: (416) 980-1234

துரித பணமாற்றுச் சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கு கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
☎ (416) 267-8221


சிவாகம கிரியா பீடம்
☎: (416) 724-7480
திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை கடை திறப்பு, லக்சுமி பூஜை சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜைகள் மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம் ஆயுஷ்ய ஹோமம் தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறையா? தலைஅலங்கார ஜோடனைகளா? ஜடை நாகம் ஆண்டாள் மாலைகளா? தலைப்பாகையா? பரத நாட்டிய அலங்கார ஆபரணங்களா? மற்றும் கல்யாண மண்டபமா? உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள். சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்) திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்
5 Greenleaf Terr., Scarborough, Ont.



# அறிவும் ஆக்கமும் (51)

-விஜே குலத்துங்கம்

2000 வருடங்களின் முன்னர் மனிதனின் சராசரி வயது 35 ஆக இருந்தது. தற்போது வளர்ச்சியடைந்த நாடுகளில் ஏறக்குறைய அது 80ஐ நெருங்கிவிட்டது. ஒருவரின் வயதை மூன்று காரணிகள் தீர்மானிக்கின்றன. ஒன்று விபத்துக்கள், இயற்கை அழிவுகள், மற்றது நோய்கள், மூன்றாவது **Aging** எனப்படும் வயது முதிர்தல் ஆகும். விபத்துக்களையும், இயற்கை அழிவுகளையும் தடுப்பது கஸ்டம். மற்றய காரணியான நோய்களானது வயது முதிர்வுடன் சம்பந்தப்பட்டது. வுயது செல்லச் செல்ல தாக்கும் நோய்களின் அளவும் கூடிச்செல்லும். ஏனவே வயது முதிர்தலை தடுக்கும் அல்லது குறைக்கும் வழிமுறைகள் வயதெல்லையை கூட்டும். வயது முதிர்வை தீர்மானிப்பது உடலிலுள்ள கலங்கள்தான். கலங்கள் தொடர்ந்து பிரிவடைந்து புதிய கலங்கள் உண்டாகும் போது, உறுப்புகள், தோல் போன்றவை இளமையாக இருக்கும். ஒரு வயதுக்குமேல் புதிய கலங்கள உண்டாக மாட்டாது. அந்த நிலையில் பழைய கலங்கள் இறக்க உடல் முதிர்வடையும். இந்த முதிர்வடையும் தொழிற்பாட்டை **telomere** என அழைப்பார்கள். இதுதான் கலங்கள் எத்தனைமுறை பிரிகையடையலாம் என்பதை தீர்மானிக்கின்றது. குரோமசோஆனது. ம் - முனைகளில் **telomere** ம், நிறமூர்த்தங்கள் இரு பாகங்களால் நடுவில் **cetromeres**ம் இருக்கும் கலங்கள் பிரிகையடைந்து செல்ல முனைகளிலுள்ள **telomerase** என்னும் ப்தார்த்தம் குறைந்து கொண்டு போகும். ஏனவே சிலகாலங்களின் பின்னர் கலங்கள் பிரிகையடையாது.

மூளைக்கலங்கள் பிரிவடையாது தோற்கலங்கள் 50 தடவை பிரியலாம். சாதாரணகலங்கள் 20-30 தடவைகள் பிரியும். ஆனால் இனப்பெருக்கக் கலங்கள் தொடர்ந்து பிரிந்துகொண்டே இருக்கும். இந்த இனப்பெருக்கக் கலங்களிலுள்ள **telomerase**ஐ பிரித்தெடுக்கமுடியும் என 1998ம் ஆண்டு **Geron** என்னும் நிறுவனம் அறிவித்தது. இந்த நிறுவனத்தின் கூற்றின்படி அவர்கள் இந்த **telomerase**ஐ தயாரித்து உடலில் ஏற்றினால் கலங்கள் தொடர்ந்து பிரிகையடைந்து கொண்டே இருக்கும். எனவே கலங்கள் முதிர்வடையாது. உடலும் முதிர்வடையாது இருக்கும். தற்போது குறிப்பிட்ட சில கலங்களில் பரிசோதனைச் சாலையில் முயற்சிகள் செய்யப்படுகின்றன. இந்த நிறுவனத்தின் அறிக்கையின்படி 2005ம் ஆண்டளவில் மனிதரில் இதைப் பரிசோதிப்பார்கள். 2015ம் ஆண்டு அளவில் மனிதர்களுக்கு சாதாரண சிகிச்சை மாதிரி இது அளிக்கப்படும் எனவும் கூறப்படுகின்றது. இது நடைமுறைக்கு வந்தால் மனிதன் 150-200 வருடங்கள் வாழலாம் - இது மனிதனின் வயது எல்லையை அதிகரிக் உதவும்.

ஒரு மோட்டார் வண்டியின் வயது செல்லச் செல்ல நாங்கள் சில பாகங்களைக் கழற்றி, புதுப்பாகங்களால் மாற்றீடு செய்கின்றோம் . அதன் **body**ஐ கறள் நீக்கி, புது பெயின்ட் அடித்து புதுக் கார் ஆக்குகின்றோம். அதேபோல் மனிதரின் உடலின் உறுப்புக்களையும் பழுதடைய அவற்றை மாற்றீடு செய்யலாம். இரு வாரங்களுக்கு முன்னர் டொரண்டோ பொது வைத்தியசாலையில் செய்யப்பட்ட ஒரு சத்திரசிகிச்சையில், ஒருவருக்கு ஈரல், சதையம், இரப்பை மற்றும் பெருங்குடல் ஆகிய நான்கு உறுப்புகள் மாற்றீடு செய்யப்பட்டது.

இப்படியாக உறுப்பு மாற்றம் புதியதல்ல. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அராபியர் பற்களை மாற்றி புதுப்பல்லு (பொய்ப்பல்லு) கட்டினார்கள். பின்னர் கண்பழுதடைய மூக்குக் கண்ணாடி பாவனைக்கு வந்தது. பின்னர் செவிப்புலன் கருவி - **Hearing Aid** பாவனைக்கு வந்தது. பின்னர் பொய்க்கைகள், பொய்க்கால்கள் பாவனைக்கு வந்தன. அண்மையில் கை துண்டிக்கப்பட்ட ஒருவருக்கு, இன்னொருவரின் விரல்களுடன் கூடிய மணிக்கட்டு வரையான பகுதியை பொருத்தி, தற்போது அந்தக் கை வழமைபோல் இயங்குகின்றது. தற்போது சிறுநீரகம், ஈரல், இதயம், சுவாசப்பை ஆகிய உள் உறுப்புகள் கூட மாற்றீடு செய்யப்படுகின்றன. இவ்வாறு தற்போது ஏறக்குறைய 72 உறுப்புகள் மாற்றீடு செய்யக்கூடியதாக உள்ளன.

தற்போது வேறு விலங்குகளில் இருந்தும் உறுப்புகள் எடுத்து மாற்றீடு செய்ய முயற்சி எடுக்கப்படுகின்றன. அதைவிட தாவரங்களில் செய்வது போல, இழையவளர்ச்சி - **tissue culture** மூலமும் உறுப்புகள் செய்ய முயற்சிக்கப்படுகின்றன. ஏதிர்காலத்தில் உறுப்புகள் செய்யும் தொழிற்சாலையும், கடைகளில் உறுப்புகள் வாங்கக் கூடிய நிலையும் உருவாகும். இக்காலகட்டங்களில் இந்த முறை மூலமும் மனிதரின் வயதெல்லை அதிகரிக்கும்.

**Ohio**விலுள்ள **Case Western Reserve University** ஐச் சேர்ந்த **Dr. Robert White** என்பவர் குரங்குகளில் செய்த ஒரு பரிசோதனையில் ஒரு குரங்கின் தலையை, இன்னொரு குரங்கின் தலையில்லா உடலுடன் பொருத்தி அதை இயங்க வைத்துள்ளார். இவரின் கருத்துப்படி இன்னும் 10 வருடங்களில் இது மனிதரில் சாத்தியமாகலாம். ஒருவருக்கு மூளை பழுதடைந்துவிடலாம். இதனால் அவர் இறக்கக்கூடும், ஆனால் கழுத்துக்குக் கீழே உடல் நன்றாக இருக்கலாம். இன்னொருவருக்கு உடல் பழுதாகி, ஆனால் மூளையுடன் கூடிய தலை நன்றாக இருக்கலாம். ஏனவே அவரின் தலையை மற்றொருவரின் உடலுடன் பொருத்தக்கூடியதாக வரலாம். எங்களை இயக்குவது, எங்களது மனம், உணர்வு எல்லாமே மூளைதான். ஒருவரின் தலையை மற்றொருவரின் உடலுடன் பொருத்தினால் யாருடைய "ஆன்மா" அங்கு உயிருடன் இருக்கப்போகின்றது. தலை வந்தவருடையதா அல்லது இதயம் வந்தவரினதுதானா என்ற கேள்வி எழுகின்றது. இதயம் மாற்றீடு செய்யப்பட்டால், தற்போது யாருடைய இதயம் எனக் கூறுவது? விஞ்ஞான கண்டுபிடிப்புகளால் பழைய தத்துவங்கள், விளக்கங்கங்கள் எல்லாம் பொய்யாகிப் போகின்றன.

11 வருடங்களாக தமிழர் மத்தியில்

யோகாஸ்

☎: (416) 267-0408

## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 104

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | █ | | 3 |
| | █ | | █ | | █ | 4 | |
| | █ | | █ | 5 | | 6 | |
| | | 7 | █ | █ | █ | █ | █ |
| █ | █ | | █ | | | | 8 |
| | █ | | | 9 | █ | █ | █ |
| | 10 | █ | █ | | █ | 11 | |
| 12 | | | | 13 | | | █ |

### இடமிருந்து - வலம்

1. ஏற்றுக்கொள்
3. தேசம் (வல-இட)
4. கண்
5. வீட்டிற்கு வாடகை போல் காணி நிலத்திற்கு இது
7. மாட்டு தொழுவம் (வல - இட)
8. விருப்பம் (வல-இட)
9. அடக்கம் (வல - இட)
10. செல்வம் (வல-இட)
11. நாங்கள்
12. வள்ளுவருக்கு 133' உயர சிலை வைத்திள்ள இடம்

### மேலிருந்து கீழ்

1. சந்தை
2. மாணவருக்கு இருக்க வேண்டிய குணம்
3. 24 நிமிடங்களை குறிக்கும் தமிழ் அளவு
5. கன்னி (கீழ்-மேல்)
6. அரிசிக்கும் உமிக்கும் இடையில் இருப்பது (கீழ்-மேல்)
8. வெட்கம்
10. பெண்ணின் கண்ணிற்கு இதன் கண்ணை ஒப்பிடுவர்
11. இடுப்பு
12. இது சிறிதானாலும் காரம் பெரிது என்பர் (கீழ் - மேல்)
13. மங்கலத்திற்காக முகப்பில் வைப்பது (கீழ்-மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் FEBRUARY 28, 2000க்கு முன்னர் விளம்பரம் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ச | ந் | தி | ரி | கா | █ | தி | ஆ |
| ஞ் | █ | ர | █ | █ | கை | வி | னை |
| சா | த | க | ம் | █ | கொ | █ | யி |
| ர | █ | டு | █ | █ | டு | █ | ற் |
| ம் | ட | க | ங் | ச | █ | █ | வு |
| █ | █ | ம் | █ | கோ | ழி | ல் | █ |
| றை | █ | █ | █ | த | █ | கோ | பி |
| பா | க் | கு | நி | ரி | னை | █ | ணை |

**#103இல் வெற்றி பெற்றோர்**

1)P. Parathan, North York, Ont.

2.K. Siva, Toronto, Ont.

*இலங்கை, இந்திய, கனேடிய உணவுப் பொருட்கள் உடன் ஆட்டிறைச்சி, கோழி, மாடு, மீன், கணவாய் மற்றும் சகல விதமான உணவுப் பொருட்களுக்கும் நாடுங்கள்*

TAMIL INSURANCE CLAIMS CONSULTANT

தமிழில் இலவச ஆலோசனை

வாகன விபத்து அல்லது வீடு விபத்து ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?

*தகுந்த ஆலோசனை *சட்ட உரிமை *உரிய நஷ்ட ஈடு

*விபத்துக்குள்ளாலியவர் சம்பள இழப்பீடு

*மற்றும் நுணுக்கமான ஆலோசனைகளும் அறிவுரைகளும் தமிழிலும்

ஆங்கிலத்திலும் சிறந்த முறையில் பெற்றுக்கொள்ள 12 வருடகால அனுபவமுள்ளவர்

ரவி நடராஜா

TEl:(416) 245-6555 Fax: (416) 245 7766

2095 Weston Rd. #201 (South of HWY 401) Toronto Ont. M9N 1X7

அமெரிக்காவிலுள்ள **Texas** இலுள்ள **Cryonics Institute** என்ற நிறுவனம் 40,000 டொலர்கள் கொடுத்தால் நல்ல நிலையில் இறந்த ஒருவரின் உடலை, திரவ நைதரசனில் பழுதடையாமல் வைப்பார்கள். 50 - 60 வருடங்களில் மருத்துவ விஞ்ஞான வளர்ச்சி இப்படியான உடல்களுக்கு மீண்டும் உயிரைக் கொடுக்கக்கூடியதாக வரும்போது, இவை உயிர்த்தெழ வாய்ப்புகள் உண்டு. அப்படியான நிலை வரும்போது 'ஆன்மா' ஓய்வு நிலையில் இருந்து மீண்டும் இயங்குமா, அல்லது வேறு எங்காவது சுற்றுலா சென்றுவிட்டு, மீண்டும் உடலில் புகுந்து கொள்ளுமா, அல்லது புதிய ஆன்மா சேர்ந்து கொள்ளுமா என்றெல்லாம் கேள்கவிகள் எழுகின்றன.

முன்கூறியது போல் 200 ஆண்டுகளுக்கு முன்னர் 35 ஆக இருந்த சராசரி வயது தற்போ இரண்டு மடங்குக்கு மேலாக, இன்னும் 50 வருடங்களாகப் போகின்றன. எனவே கிரகங்களின் தாக்கம் - கிரக பலன்கள் ஆகப் போகின்றன.

எனவே கிரகங்களின் தாக்கம் - கிரக பலன்கள் குறைந்து கொண்டு செல்கின்றனவா?

**M.G.R**.ன் ஒரு பழைய பாடல் நினைவுக்கு வருகின்றது. "அறிவுக்கு வேலை கொடு - பகுத்தறிவுக்கு வேலை கொடு "மூடப்பழக்கத்தை விட்டுவிடு - காலம் மாறுது கருத்தும்மாறுது நாமும் மாறவேண்டும்."

இனிமேல் வாழ்த்தும்பொழுது நாம் நூறாண்டு காலம் வாழ்க என வாழ்த்தாமல் 200 ஆண்டு காலம் வாழ்க என வாழ்த்த வேண்டும்.

"அறிவும் ஆக்கமும்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் —6 scarfair pathwath, scarborough, ontario, M1B 4G2 என்ற விலாசத்திற்கு அல்லது wijey@interlog.com என்ற விலாசத்திற்கு e-mail அனுப்பவும்.

# APPLEMORE AUTOMOTIVE

Apple Apple Apple


உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing




- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility




**Tel: (416) 285-4998**

**2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON**

Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple



## OODAM MAINTENANCE WORKS

Janitorial Services ("Sanitation for the Nation")



* KITCHEN RENOVATIONS
*BATHROOM REVOVATION
*TILES
*PLUMBING




*>Railing > Fencing >Welding*

Free Estimates

Pl. Call: Thamby - TEL./Fax: (416) **638-2796**

18 Brantley Cres. Downsview, NorthYork, M3J 1X5


## பழைய வாகனங்களை வாங்கும் போது உத்தரவாதம் வாங்குவது தேவையா



புதிய வாகனங்களை வாங்கமுடியாதவர்கள் பழைய வாகனங்களை வாங்குவது இயல்பான விடயம். அதுமட்டும் அல்லாது கனடாவிற்கு புதிதாக வந்தவர்களும், காப்புறுதி (Insurance) கூடுதலாக செலுத்துபவர்கள் தங்கள் Insurance குறைவதற்கான பழைய வாகனங்களை வாங்கி பாவிப்பது நல்ல பலனைத் தரும். அப்படி வாகனங்களை வாங்கும்போது அவர்கவர் தங்கள் நிதி நிலைமைக்கு தகுந்தாற்போல் வாகனங்களை வாங்குவது சிறந்ததாகும். அப்படி வாங்கும் போது ஒரு முக்கியமான விடயத்தை மனதிற் கொண்டிருத்தல் வேண்டும். அதாவது நீங்கள் வாங்கும் வாகனத்திற்கு சிலர் உத்தரவாதம் (Warranty) தருவது உண்டு. சிலர் தருவது இல்லை. நீங்கள் $2000, $3000 க்குள் வாங்கும் வாகனங்களுக்கு உத்தரவாதம் தருவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. எனது சிறிய அறிவுரை என்னவெனில் நீங்கள் உங்கள் பணத்தை பெரிய அளவில் செலவுசெய்து இந்தமாதிரியான வாகனங்களை வாங்கும் பொழுது Extend Warranty ஐ சிறிது பணத்தை செலுத்துவதன் மூலம் நீங்கள் மனநிம்மதியாக இருக்கலாம். இதற்கு உதாரணமாக நடந்த ஒரு நிகழ்வை இங்கு தருகிறேன். ஒரு தமிழ் அன்பர் என்னுடன் தொடர்பு கொண்டு , அண்ணே! நான் 95 Accord Ex பார்க்கிறேன் இருக்கிறதா என்றார். நானும், 79,000 Km ஓடிய ஒன்று நிற்கிறது $15,900 கேட்டிறார்கள். நான் $14,500 க்கு 3 வருட உத்தரவாதத்துடன் எடுத்துத் தருகிறேன் என்றேன். அதற்கு அந்த தமிழ் அன்பர் எனது நண்பர் இலங்கையை சேர்ந்தவர் அவரிடம் பார்த்துவிட்டு வருகிறேன் என்றார். அதற்கு பின் அந்த நபர், குறிப்பிட்டவரிடம் 94 Acc Ex, 125,000 km ஓடியதை $14,000 கொடுத்து வாங்கி விட்டார். 6 மாதத்தில் Transmission போய்விட்டது. தமிழ் அன்பர் தனது இலங்கையைச் சேர்ந்த நண்பரிடம்ஓடோடிச் சென்று முறையிட்டார். அவரோ கையை விரித்து விட்டார். நடந்தது தமிழ் அன்பர் $2000 செலவழித்து திருத்தியுள்ளர். இது அவருக்கு நல்ல பாடம். இதை அழாக்குறையாக என்னிடம் முறையிட்டார். இதை ஏன் இங்கு தருகிறேன் என்றால் நீர் எதையும் வாங்கும் போது ஒரு தமிழன் மூலம் வாங்கப்பார். அதைவிடுத்து எடுப்புக்காட்டி அழிவைத்தேடுவது நீர்தான். உங்கள் வாகனங்களை வாங்கும்போது உத்தரவாதத்தையும் கட்டாயம் வாங்குங்கள். உங்களுக்கு அதனால் நட்டமும் கிடையாது. அதனால் லாபமே தவிர நட்டமும் கிடையாது.

தமிழர்களே! எந்த ஒரு பொருளையும் வாங்கும் போது அது வாகனமாக இறந்தால் என்ன, வீடாக இருந்தால் என்ன எதுவாக இருந்தாலும் தமிழில் உரையாடி, அதனை விளங்கப்படுத்துபவரிடம் சென்று வாங்குங்கள். இதனால் நம் எல்லோரிற்கும் நல்லது, சிறந்தது.

*மேலதிக விபரங்களுக்கு- **சோதீஸ்** Cell (416) 704 -1179*


## நியூ மிலேனியத்தில் ஸ்காபரோவில் 9 வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க
வாகனத்திருத்த வேலைகளுக்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

**Also Air Conditioning Service & Repair**


**NTE AUTO INC.**
**New Trade Engineering**

**என். ரி. இ. ஓட்டோ இங்க்**

Contact: Sivabalan சிவபாலன்

**Tel: (416) 750 - 1573**

151 NANTUCKET BLVD., UNIT #12, SCARBOROUGH, ONT.



In New Millennium We are entering 9th year service in Scarborough


### LARGEST BODIES IN THE SOLAR SYSTEM

| | Body | Maximum km | diameter miles |
|---|---|---|---|
| 1 | Sun | 1,392,140 | 865,036 |
| 2 | Jupiter | 142,984 | 88,846 |
| 3 | Saturn | 120,536 | 74,898 |
| 4 | Uranaus | 51,118 | 31,763 |
| 5 | Neptune | 49,532 | 30,778 |
| 6 | Earth | 12,756 | 7,926 |
| 7 | Venus | 12,103 | 7,520 |
| 8 | Mars | 6,794 | 4,222 |
| 9 | Ganymede | 5,269 | 3,274 |
| 10 | Titan | 5,150 | 3,200 |



# ஆரோக்கிய வாழ்வு (51)

N. செல்வசோதி

## நோய் தடுக்கும் கவசம்

இக்கால நவ நாகரீக உலகில் எவ்வளவோ சிறந்த மருத்துவமுறைகளும், சீரிய சீர்திருத்த முறைகளும் மனிதனால் கைக்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த சூழ்நிலையில் நோய்களும் மனிதனைத் திடீர் திடீரென பற்றிக் கொள்வதுடன் முன் எப்போதும் கண்டறியப்படாத நோய் கிருமிகளும் உருவாகி மனித குலத்தை நாசம் செய்கின்றன. ஆனால் ஒருவித மருத்துவ வசதிகளுமின்றி காட்டில் வாழும் விலங்குகள் கூட மனிதனைக்காட்டிலும் ஆரோக்கியமாக வாழ்கின்றன.

இவ்வாறு மனிதனை மட்டும் நோய்கள் தாக்குவதற்கு முக்கிய காரணம் இயற்கையோடு ஒத்து வாழாமல் மாறாக தனது உடல் உள்ள திருப்திக்காக பல வேண்டப்படாத பழக்கங்களுக்கு ஆளாகி விடுவதுதான். இதனால் ஆரோக்கியமும் பொதும் குன்றுகிறது. பசிக்கும் போது உண்ணுதல், நித்திரை, உழைப்பு போன்றவை இந் நாட்டில் நேர காலம் பாராது தாறுமாறாக நடக்கின்றன. தொற்று நோயுள்ள இடங்களில் பழகுதல், அறிந்தோ அறியாமலோ நோயாளியுடன் பழகுதல் இங்கு சாதாரணமாகவே நிகழ்கின்றன. அத்துடன் எங்கும் தமிழ் இந்திய உணவகங்கள் அநேகமாக வீட்டிலும் **Take out** சாப்பாடுதான். இதனை உண்ண வேண்டிய நிலை அடிக்கடி ஏற்படும் போது நோய்களிலிருந்து விடுபட நினைப்பது சாத்தியமில்லை.

இயந்திரமயமான உலகில் நாகரீக வாழ்வு வாழப் பழக்கப்பட்ட நமக்கு சகல நோய்களையும் வராது தடுக்கும் கவசம் ஒன்று மிகவும் இன்றியமையாதது. அதுதான் யோகாசனம், பிராணாயாமம் என்பனவாகும். உணவு, ஒழுக்கம், உறையுள் என்பவற்றில் ஒரு ஒழுங்கைக் கடைப்பிடிப்பதுடன் தினமும் குறிப்பிட்ட நேரத்தை ஆசனப் பயிற்சிக்கு ஒதுக்கும் போது உடலில் அற்புதமான சக்திகள் அதிகரித்து வருவதை காணமுடியும். இவற்றுள் சில:-

(1) உயிர்க்கருவிக்கான இருதயம் சுவாசப்பைக்கு நேரடியாகத்தாக்கி சிறந்த நிலையில் வைக்கிறது.

(2) இரத்த ஓட்டத்தை சுறுசுறுப்பாக்கி அசுத்தத்தை எளிதாக முற்றிலும் அகற்றுகின்றது.

(3) நோய்க் கிருமிகளைக் கொன்று உயிர்ப்பிக்கும் சக்திகளை எண்ணற்ற மடங்கு அதிகரிக்கச் செய்கிறது.

(4) வளர்ச்சி, ஆண்மை, பெண்மை மேலோங்கச் செய்வதற்கு உதவுகிறது.

(5) உடலை வளம்பெற வைக்கிறது.

(6) ஊளைச்சதை உருவாகாது தடுக்கிறது.

(7) ஆயுளை அதிகரிக்கிறது

(8) புலன்களைச் சுத்தம் செய்கிறது.

(9) மூளையை அபிவிருத்தி செய்கிறது.

(10) நரம்பு மண்டலங்களை விளிப்புறச் செய்து நன்கு விரியப்படுத்தி ஒழுங்காக வேலை செய்ய உதவுகிறது.

(11) மனதிற்கு சாந்தி அளிக்கிறது

(12) பிராணவாயு உடலில் இயற்கைக்கு உகந்தவாறு பரவி நோய்க் கிருமிகளை விரட்டுகிறது.

(13) களைக்காது அதிக வேலை, அதிக படிப்பு, சிறந்த சிந்தனை செய்ய உதவுகிறது.

(14) ஒவ்வொருவருக்கும் அவரவர் செய்யும் தொழிலில், வாழ்வில் வெற்றி பெறும் சாமர்த்தியத்தை அளிக்கிறது.

இது போன்ற இன்னும் எத்தனையோ நன்மைகளை மனிதனின் உடலுக்கும் உள்ளத்திற்கும் யோகாசன பிராணாயாம பயிற்சிகள் அளிக்கிறது. இதனை குறைந்தது


**யோகாசன வகுப்பு**

யோகாசனப் பயிற்சிகள் மூலம் உங்கள் உடல் நலத்தைப் பேணுங்கள். யோகாசனப் பயிற்சி வகுப்புக்கு தொடர்புகொள்ள

இடம்: Woburn Collegiate (Markham /Ellesmere)

நேரம்: 7:30 am - 8:30am தொடர்புகளிற்கு: - சத்தி: 291-5853



**Neelam SILK**

**நீலம் சில்க்**

2000ஆம் ஆண்டின் புதிய புடவைத் தெரிவுகளை நம்மவர்களுக்கு அறியத்தருகிறார்கள் 'நீலம் சில்க்'

**உயர்ரகப் பட்டுப் புடவைகளிற்கு நீலம் சில்க்**

- முகூர்த்தப்பட்டுப் புடவைகள்
- பாரம்பரிய பட்டுப் புடவைகள்
- Thread Work பட்டுப்புடவைகள்
- ரிசு சேலைகள்
- காஞ்சி 2000 ரிசு சேலைகள்
- Emboss Tissue சேலைகள்,
- Cut Work சேலைகள்
- அபூர்வா 2000 Cut Work



**புதிய வெளியீடுகள்**

மைசூர் சில்க் சேலைகள், சோனா மீனா (Sona Meena) புதிய டிசைன்கள். இவை மட்டுமல்ல இன்னும் பலவித தெரிவுகள்

"தமிழர் மத்தியில் ஓர் தரமான பட்டுப்புடவை மாளிகை"

**'நீலம் சில்க்'**

1453 GERRARD STREET EAST (Indian Bazzar)

CALL: (416) 778- 7455 FAX: (416) 778-8484


### நினைவில் கொள்ள

* சாப்பிடும் போது இடையிடையே எழுந்திருக்கக் கூடாது. சாப்பிடும் போது அதிகப்பேச்சும், நகைப்பும், பலவிதமான யோசனைகளும் கூடாது. அமைதியாக சாப்பிடவேண்டும். சாப்பிடுமபோது இடையிடையே தண்ணீர் குடிக்கவும் கூடாது.

* முதல் வேளை சாப்பிட்ட உணவு செரித்து பசி எடுத்தவுடன் தான் அடுத்த வேளை உணவு சாப்பிடவேண்டும். அதிகப் பசி, கோபம், துயரம் உள்ளபோது சாப்பிடுவது நல்லதல்ல. அந்த சமயங்களில் திரவ, இலகுவான உணவுகளை சாப்பிடலாம்.

* அதிக வியர்வைப் பிரச்சனை உள்ளவர்கள், தொண்டை நோய் உள்ளவர்கள் குளிர் பானம் உள்பட அனைத்து வகையான பானங்களையும் தவிர்ப்பது நல்லது.


கனடாவில் முதன்முதலில் தலைவாழை விருந்து படைத்தவர்கள்

**கிராமத்து விருந்து**




RESTAURANT, CATERING, TAKE OUT L.L.B.O.

603 Kennedy Road,
Scarborough, Ont.

☎: (416) 266-4240

***TAKEOUT ONLY***

சிக்கன் அல்லது பீவ்(Beef) முஸ்லிம் ஸ்ரைல் பிரியாணி, தலை வாழையிலையில் ஆக $5.99 மட்டுமே



**மட்டக்களப்புக்கு பணம் அனுப்ப**

மட்டக்களப்புக்கு 24 மணி நேரத்தில் பணம் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும். புளியந்தீவு, ஏறாவூர், செங்கலடி, வாழைச்சேனை, கல்முனை மற்றும் மட்டக்களப்பு டவுண் அழைக்கவும் ஜோசப் (416) 266-4240

ஒரு சாதாரண மனிதரின் சிந்தனையில்...

# புதிய நூற்றாண்டில் பழைய பாடங்கள் (3)



நாட்டுக்கு ஒரு தலைவன் கிடைக்கமுன் அவன் வீட்டுக்கு தலைவனாக வரக்கூடிய தகுதியை பெறுவது அவனது தாய் தந்தையரின் வளர்ப்பிலிருந்து என்பது எல்லோருக்கும் தெரியும். என்றாலும் எத்தனை பெற்றோர்கள் தமது கடமைகளை சரிவரச் செய்கிறார்கள்? பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு வேண்டிய நல்ல பழக்க வழக்கங்களை சொல்லிக் கொடுக்கின்றார்கள்.

உண்மை அன்பும் பாசமும் ஊட்டும் உணவுடன் சேர்த்து ஊட்டப்பட வேண்டும் என்பது நாம் அறிந்த உண்மை. அப்படி வளர்க்கப்படும் பிள்ளைகள்தான் வளர்ந்து பெரியவன் ஆனதும் மற்றவர்களையும் நேசிக்கின்றான். மனித உயிர்களை மதிக்கின்றான். தனது வாழ்கை துணைக்கு வருபவளும் உண்மை அன்பும் பாசமும் உடையவளாக இருந்துவிட்டால், உண்மை அன்புடன் ஒருவரை ஒருவர் நேசித்து அந்த அன்பின் சின்னமாக மழலைகள் உருவாக்கப்பட்டு அக்குழந்தைகள் உண்மை அன்புடன் பாசத்துடன் வழக்கப்படும் போது வாழ்க்கையில் அன்பும் பாசமும் ஒரு சங்கிலித் தொடர்போல தொடர்கின்றது. அந்தச் சங்கிலித்தொடர் அறுந்து விடாமல் இருக்க கண்ணும் கருத்துமாக காக்க வேண்டியது மனிதனின் தலையாய பொறுப்பாகும். நல்ல பொறுப்புணர்ச்சியுடன் வளர்க்கப்படும் பிள்ளைகள் எதிர்காலத்தில் நல்ல குடும்பத்தின் தலைவனாகவோ, தலைவியாகவோ ஆக்கப்படுகின்றார்கள். அவர்களில் ஒருவன் நல்ல ஒரு தலைவனாகி நாட்டு மக்களை நல்ல வழியில் நடத்தி செல்கின்றான்.

சென்ற நூற்றாண்டில் மக்களை சுதந்திரப் பாதையில் இட்டுச்சென்று வெற்றி பெற்ற தலைவர்கள் எனும் போது மகாத்மா சாந்தியையும் அவர்வழியில் அகிம்சா வழியை பின்பற்றி கறுப்பு இன மக்களின் அடிமைத்தனமான வாழ்க்கைக்கு அமெரிக்க நாட்டில் சுதந்திரம் கிடைக்க முன்னின்று உயிர் விட்ட டாக்டர் (Dr.) மாட்டின் லூதர் கிங் அவர்களின் முயற்சியையும் சொல்லலாம்.


மகாத்மா காந்தியின் அகிம்சை முறையில் கத்தி இன்றி இரத்தம் இன்றி சத்தியாக்கிரகம் என்ற போரில் இந்தியா சுதந்திரம் அடைந்தது. அதே வழியில் சென்ற Dr. கிங் அவர்களின் தியாகத்தால் கறுப்பு இன மக்களுக்கு சுபீட்சமான வாழ்வு கிடைக்க வழி வகுத்ததோடு அல்லாமல் Dr. கிங்கின் போராட்டத்திற்கு அமெரிக்க அரசாங்கம் செவிமடுத்து முயற்சி செய்த படியால்தான் இன்று அமெரிக்கா உலகின் முதல் தரமான வல்லரசு நாடாக இயங்கக் கூடியதாக இருக்கின்றது. அமெரிக்கா Dr. கிங்கின் போராட்டத்திற்கு செவிமடுக்காமல் இனத்துவேச நாடாக இருந்து இருந்தால் எந்த ஒரு நாட்டிற்குள்ளும் நிமிர்ந்து செல்ல முடியாமல் இருந்திருக்கும். எனவே உலகில் அமெரிக்க நாட்டிற்கு இன்றைய வல்லரசு நாடு என்ற பெயரை பெற்று தந்தவர் Dr. கிங் என்றும் சொல்லலாம்.

சிந்தனை தொடரும்...

ஒரு சாதாரண மனிதன் - பரம். G


YARL WINDOW COVERING
1530 WARDEN AVENUE
உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இப்பொழுதே தொடர்பு கொள்ளுங்கள்

CUSTOM MADE..
* VENETIAN BLINDS
* VERTICAL BLINDS
* ROLLER BLINDS
* PLEATED SHADES
* DRAPERIES



இருபத்தாறு வருடங்களுக்குமேல் அனுபவம் உள்ளவர்களால் உங்கள் திரைச்சேலைகள் தைத்துக் கொடுக்கப்படும்

FREE ESTIMATE

தொடர்புகளுக்கு:
என். செல்வம்
(416) 383-0205
(416) 650-0377



கலைமகள் புத்தக நிலையம்

* சிறுவர்களிற்கான நீதிக்கதைகள்
* தமிழ்ப் புத்தகங்கள்
* கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்
* இலங்கை/இந்திய பத்திரிகைகள்
* குறுங்கதைகள், சரித்திரப் புத்தகங்கள்
* CREDIT LEVEL தமிழ் பாடப்புத்தகங்கள்
* கனடிய தமிழ்ப் பிரசுரங்கள் மற்றும் பலப் பல

துரித பணமாற்றுச் சேவை


594 PARLIAMENT ST.
TORONTO, ONT.
☎: (416) 921-5018

3238 Eglinton Ave., East
Scarborough, Ont.
☎: (416) 265-3605


3850 FINCH AVE. E.
GO 1A
SCARBOROUGH, ONT.
☎: (416) 292-9319

2580 Sheppard Ave. #9
Newin Centre Mall
Mississauga, Ont.
☎: (905) 306-0494





பூட்டு? சாவி?
KEERTH LOGSMITH
வீடு-வியாபாரம்-தொழிலகம்
வீட்டு திறப்புகள் தொலைந்து விட்டதா? மாற்ற வேண்டுமா? மற்றும் உங்களது சகலவித திறப்பு சம்பந்தமான பிரச்சினைகளிற்கு தீர்வு காண நினைவில் வைத்திருக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்



(416) 439-3709
Pager: 375-7330



வீடுத் தயாரிப்பு - சிற்றுண்டிகள்

சுத்தமான வீட்டில் செய்யும் பலகாரங்கள், சிற்றுண்டிகள், முட்டை மா, திருமண வீட்டிற்கு தேவையான பலகாரங்கள், எள்ளுப்பாகு, பல்லுக் கொழுக்கட்டை, பருத்தித்துறை வடை, சீனி அரியாரம், பால் றொட்டி சகல பலகாரங்களும் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டத் தரப்படும். நியாயமான விலை.

தொடர்புகளுக்கு :286-5026



பூச்சிகளை அழிக்கவே முடியாதா?
PEST CONTROL

* எலிகள்
* கரப்பான் பூச்சிகள்
* எறும்புகள்
* சிலந்திகள்



போன்றவற்றை முற்றாக அழித்து நிவாரணம் பெற இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.



(416) 892-4994
7 நாட்களும் அழைக்கலாம்



* 100% முற்றாக அழிக்க முடியும் என்று எழுத்து மூலம் தரப்படும்.
* ஒருதடவை அணுகுங்கள் உண்மை புரியும்.
* WE ARE QUALIFIED, PROFESSIONAL, INSURED AND BONDED.
* NO NEED TO LEAVE TO HOME OR REMOVE DISHES DURING TREATMENT.



## விளையாட்டுத் தகவல்கள் (47)

—எஸ். கணேஸ்—




## Australian Open - 2000

### Tennis

**January** 9ம் திகதி தொடங்கிய அவுஸ்திரேலியாவின் **(Australian open) Tennis** சுற்றுப் போட்டிகள் மெல்போன் நகரில் வெகு சிறப்பாக **January** 16ம் திகதி நடந்து முடிந்தது. ஒவ்வொரு வருடமும் நடைபெறும் **Grand slam** சுற்றுப்போட்டிகளில் **Australian Open** முதலாவது போட்டியாகும். **Grand Slam Titles** இல் முக்கியமாக **Australian Open, French Open, wimbeldon , U.S.Open** என்பவை முதல் இடத்தை பெறுகின்றன.


நடந்து முடிந்த **Australian Open** போட்டிகளில் ஆண்கள் சார்பாக முக்கிய வீரர்களான **Andrew Agassi, Pete Sampras, Yevgeny Kafelnikov, Patrick Rafter,** ஆகியோரும், பெண்கள் சார்பாக மூன்று தடவை **Australian Open** ஐ வென்ற **Martina Hingis, Lindsay Daven Port, Venus and Serena Williams, Monica Seles, Mary Pierce** ஆகியோரும் கலந்து கொண்டனர். 473,296 **Tennis** பார்வையாளர்கள் இப் போட்டிகளை **Australia** வின் **Flushing Meadows** என்ற இடத்தில் கண்டு களித்தனர். பெண்கள் சார்பாக **Lindsay Davenport** ம் ஆண்கள் சார்பாக **Andrew Agassi** யும் **Champion** பட்டத்தை வென்றனர்.இறுதியாட்டத்தில் ஆண்கள் பிரிவில் **Agassi**யும் **kafelnikov** யும் பெண்கள் பிரிவில் **Hingis** யும் **Daven Port**ம் கலந்து கொண்டனர். கடந்த வருடம் 1999 **Australian Open** போட்டியில் பெண்கள் பிரிவில் **Hingis** சும் ஆண்கள் பிரிவில் **Kafelnikov** யும் வெற்றி பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வருடம் **Agassi** பெற்ற வெற்றி 6வது **Grand Slam Title** வெற்றியாகும். **Canada** வை சேர்ந்த தமிழ் வீராங்கனையான சோன்னியா ஜெயசீலன் முதல் மூன்று சுற்றுகளிலும் வெற்றி பெற்றார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.




### Andre Agassi - Australia Open 2000 -(Champion)

29 வயதுடைய **Agassi,** இதுவரை **French, US, Australian open** ஆகிய போட்டிகளில் **champion** ஆக வந்துள்ளார். ஆனால் **Wimbeldon** மட்டுமே **Runners-up** ஆக வந்துள்ளார். இறுதிப்போட்டியில் வெற்றி ஈட்டியதன் மூலம் ($485,000) நாலு லட்சத்து எண்பத்திஐயாயிரம் **US** டொலர்களை பெற்றுக் கொண்டார்.

இறுதிப்போட்டியில் ரஸ்யா நாட்டை சேர்ந்தவரும் 99இல் **Australia open champion** னும் ஆன **Yevgeny Kafelnikov** யை 3-6, 6-3, 6-2. 6-4 என்ற ரீதியில் **Agassi** தோற்கடித்தார். போட்டியின் இறுதியில் **Agassi**யின் புதிய **girl friend** ஆன உலக புகழ் **Steffi Graf** வை பற்றி எதுவும் சொல்லவில்லை. ஆனால் ஆட்டத்தின் முடிவில் இருவரும் புன்னகை மூலம் தமது அன்பை பரிமாறிக்கொண்டனர்.



23 வயதுடைய அமெரிக்க நாட்டை சேர்ந்தவரும் **world** இல் பெண்கள் பிரிவில் 2வது இடத்தில் இருப்பவருமான **Lindsay Davenport** இவ்வருடம் **Australian Open** பெண்கள் பிரிவு **champion** விருதை **world** ல் முதலாம் இடத்தில் உள்ள **Martina Hingis** யை வென்றதன் மூலம் பெற்றுக் கொண்டார். இறுதியாட்டத்தில் 6-1,7-5 என்ற ரீதியில் **Hingis** யை வெற்றி கொண்டார். கடந்த மூன்று ஆண்டுகளாக 19 வயதுடைய **Hingis Australian** open ஐ வென்று வந்தார்








இறுதியாட்டத்தில் இரண்டாவது சுற்றில் 5-1 என்ற நிலையில் **Davemport match point** க்கு வந்தார். ஆனால் திடுமென **Hingis** அதனை முடியடித்து 5-4 என்னும் நிலைக்கு வந்தார். இறுதியாட்டம்வரை இருவரும் கடைசிவரை விட்டுக்கொடுக்காமல் விளையாடினார்கள். ஆனால் அதிஸ்ட தேவதை **Davenport** பக்கமே திரும்பியது. இறுதியாட்டதை வென்றதன் மூலம் $460,000 (நாலுலட்சத்து அறுபதாயிரம) **US** டொலர்களை பெற்றுக்கொண்டார். 98ம் ஆண்டு **US open** ம், 99 இல் **Wimbledon** ம் 2000 ஆண்டு **Australian open** ல் வென்ற **Davenport,** இன்னும் **French open** மட்டுமே வெல்லவில்லை.

**February 6ம் திகதி ATP யினால் தரப்படுத்திய உலகத்தில் முதல் 10 tennis ஆண் வீரர்கள்:-**

| | | | |
|---|---|---|---|
| 1. Andre Agassi, | United States, | 5, 048 | points |
| 2. Yevgeny Kafelnikov, | Russia, | 3,465 | “ |
| 3. Pete Sampras, | United States, | 3,024 | “ |
| 4. Thomas Enqvist, | Sweden, | 2,606 | “ |
| 5. Gustavo Kuerten, | Brazil, | 2,601 | “ |
| 6. Nicolas Kiefer, | Germany, | 2,447 | “ |
| 7. Todd Martin, | United States, | 2,408 | “ |
| 8. Nicolas Lapentti, | Ecuador, | 2,284 | “ |
| 9. Marcelo Rios, | Chile, | 2,245 | “ |
| 10. Richard Krajicek, | Netherlands, | 2,095 | “ |

**February 6ம் திகதி WTP யினால் தரப்படுத்திய உலகத்தில் முதல் 10 tennis பெண் வீரர்கள்:-**

| | | |
|---|---|---|
| 1. Hingis, Martina | SUI | 5734.00 Points |
| 2. Davenport, Lindsay | USA | 5190.00 Points |
| 3. Williams, Venus | USA | 4109.00 Points |
| 4. Williams, Serena | USA | 3015.00 Points |
| 5.Pierce, Mary | FRA | 2467.00 Points |
| 6. Tauziat, Nathalie | FRA | 2276.00 Points |
| 7. Martinez, Conchita | ESP | 1981.00 Points |
| 8. Halard-Decugis, Julie | FRA | 1932.00 Points |
| 9. Testud, Sandrine | FRA | 1843.00 Points |
| 10. Schett, Barbara | AUT | 1834.00Points |

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்


—தொகுப்பு - பரம் & சண்

### 1973

| | |
|---|---|
| 1. அலைகள் | 2. அன்புச்சகோதரர்கள் |
| 3. அம்மன் அருள் | 4. அரங்கேற்றம் |
| 5. இறைவன் இருக்கிறான் | |
| 6. உலகம் சுற்றும் வாலிபன்* | |
| 7. எங்கள் தாய் | 8. எங்கள் தங்க ராஜா* |
| 9. கங்கா கௌரி | 10. கட்டிலா தொட்டிலா |
| 11.காரைக்கால் அம்மையார்* | 12. காசியாத்திரை |
| 13.கோமாதா என் குலமாதா* | 14. கௌரவம்* |
| 15. சண்முகப்பிரியா | 16. சூரியகாந்தி |
| 17. சொந்தம் | |
| 18. சொல்லத்தான் நினைக்கிறேன் | |
| 19. தலைபிரசவம் | 20. திருமலை தெய்வம் * |
| 21. தெய்வக் குழந்தைகள் | 22. தெய்வாம்சம் |
| 23. தேடிவந்த லஷ்மி | 24. நல்ல முடிவு |
| 25. நத்தையிலே முத்து | 26. நியாயம் கேட்கிறோம் |
| 27.நீ உள்ளவரை | |
| 28. பட்டிக்காட்டு பொன்னையா | |
| 29. பக்தாத் பேரழகி* | 30. பாரத விலாஸ் * |
| 31. பாச தீபம் | 32. பிரார்த்தனை |
| 33. பூக்காரி * | 34. பெண்ணை நம்புங்கள் |
| 35. பெத்த மனம் பித்து | |
| 36. பொண்ணுக்கு தங்க மனசு | |
| 37. பொன்னூஞ்சல் | 38. பொன்வண்டு |
| 39. மல்லிகை பூ | 40. மணிப்பயல் |
| 41.மனிதரில் மாணிக்கம் | 42. மஞ்சள் குங்குமம் |
| 43.மறுபிறவி | 44. ராதா |
| 45. ராஜபார்ட் ரங்கதுரை* | 46. ராஜராஜசோழன் |
| 47. வள்ளி தெய்வானை | 48. வந்தாளே மகராசி |
| 49. வாக்குறுதி | 50. வாயாடி |
| 51. விஜயா | |
| 52. வீட்டுக்கு வந்த மருமகள் | |
| 53. வீட்டு மாப்பிள்ளை | 54. ஸ்கூல் மாஸ்டர் |

1973ஆம் ஆண்டு தமிழ் நாட்டிலிருந்து வெளிவந்த மொத்த தமிழ்ப் படங்களின் எண்ணிக்கை 54 ஆகும். இம்முறை அன்றைய காலகட்டத்தில் சிறப்பு நடிகர்களாக இருந்த சகலர படங்களும் வெளிவந்தன.

அன்றைய நாளில் சகலராலும பெரிதாகப் பேசப்பட்டது. தமிழில் வெளிவந்த முதல் சினிமாஸ் கோப் வர்ணப்படமான ஆனந்த மூவீஸ் ராஜராஜ சோழன். இப்படத்தை உமாபதி அவர்கள தயாரிக்க சிறப்புப் படங்களை தந்து கொண்டு இருந்த A.P. நாகராஜன் அவர்கள் இயக்கியிருந்தார்கள். இதில் சிவாஜி, சிவகுமார், முத்துராமன், லட்சுமி, நம்பியார்... என நடிகர் பட்டாளமே நடித்திருந்தது. இலங்கையில் யாழ்ப்பாணத்தில் வின்ஸர் (Windsor) தியேட்டர் நிறுவிய போது முதலிட்ட சிவாஜியின் முதல் படம் இதுவாகும். சிறந்த தியேட்டரில், சிறந்த படத்தைப் பார்த்து ரசிகர்களின் மகிழ்ச்சி இப்போது கண்முன் நிற்கிறது. தமிழனின பெருமை பேசும் ராஜராஜசோழன ஒரு சிறந்த படம்.




ராஜராஜ சோழன்

இவ்வருடம் வெளிவந்த சிவாஜியினுடைய பாரதவிலாஸ், பொன்னூஞ்சல், எங்கள தங்கராஜா, மனிதரில மாணிக்கம், ராஜபார்ட ரங்கதுரை, கௌரவம் மற்றும் ராஜராசோழன் ஆகும்.

எம்.ஜி. ஆர். இரண்டே இரண்டு படங்கள் மட்டும் நடித்து வெளிவந்தன. எம்.ஜி. ஆர் நடித்து, டைரக்ட் செய்து, உலக நாடுகள் பலவற்றில படமாக்கப்பட்ட ஜனரஞ்சகமான வெற்றிச் சித்திரம் உலகம் சுற்றும் வாலிபன், மற்றும் பட்டிக்காட்டுப் பொன்னை என்பன வாகும்.

கமலஹாசன் நடித்து வெளிவந்த சொல்லத்தான் நினைக்கிறேன் வெளிவந்ததும் இவ்வாண்டே ஆகும்.

(1973 ஆம் ஆண்டு தொடரும்)



எங்கள் தங்கராஜா



## 1973ம் ஆண்டில் சென்னை சினிமா இரசிகர் சங்கத்தின் விருதுகள் விபரம்

| | |
|---|---|
| படம்: | பாரதவிலாஸ் |
| நடிகர். | சிவாஜி கணேசன் (கௌரவம்) |
| கதை: | K. சுப்ரமணியம் (தெய்வாம்சம்) |
| டைரக்டர்: | K. பாலச்சந்தர் (சொல்லத்தான் நினைக்கிறேன்) |
| நடிகை: | பிரமிளா (அரங்கேற்றம்) |
| துணை நடிகர்: | S.V. சுப்பையா ( அரங்கேற்றம்) |
| துணை நடிகை: | ஜெயசித்ரா (சொல்லத்தான் நினைக்கிறேன்) |
| குழந்தை நட்சத்திரம்: | ஸ்ரீ தேவி (பாரத விலாஸ்) |
| பின்னணி: | TMS, P. சுசீலா |
| இசை: | M.S. விஸ்வநாதன் (பொன்னூஞ்சல்) |
| சிறப்புப் பரிசு: | அரங்கேற்றம் |

## நான் வாழப் போகிறேன்



-வீணை மைந்தன்

### சுவடு 48

கவியரசு அமரர் கண்ணதாசனிடம் உள்ள அதியுயர்ந்த பண்பு யாதெனில் திறமை படைத்த ஒரு கலைஞரை சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் மனம் திறந்து பாராட்டிவிடுவார்.

பாராட்டுக்குரியவர் கவியரசு அவர்களிடம் நெருக்கமான தோழமையில்லாவிடினும் கூட பராட்டுவதில் பின் நிற்கமாட்டார்.

நடிகர் திலகம் அவர்களுக்கும் கவியரசு அவர்களுக்கும் மிக நெருங்கிய நட்புணர்வு இல்லாவிடினும் கூட இருவரும் - ஒருவரையொருவர் தகுந்த சந்தர்ப்பம் வரும்போது மனம் திறந்து பாராட்டிக்கொள்வார்கள்.

இத்தனைக்கும் சிவாஜி அவர்களது பல வெற்றிப்படங்களுக்குப் பல வெற்றிகரமான நெஞ்சில் நிறைந்த பாடல்களை எழுதிக் குவித்தவரும் கவியரசு அவர்களேயாகும்.



அமரர் கலைஞர் ஏ.பி. நாகராஜன் அவர்களுடைய "திருவருட் செல்வர்" படத்திற்கும் கவியரசு அவர்களே முழுப்பாடல்களையும் இயற்றியிருந்தார்.

படத்தின் முதல் காட்சியே மன்னவன் வந்தானடி யென்று மன்னன் சிவாஜி அவர்களை வரவேற்று வாழ்த்தி நடனம் ஆடிப்பாடும் காட்சி. ஆடியவர் திருமதி பத்மினி. மன்னவன் வந்தானடி யென்று திருமதி பத்மினி பாடுவதற்குமுன் அரசவை நர்த்தகிகள் மன்னரை வாழ்த்துவார்கள்.

அந்த வாழ்த்துரை வரிகளில் நடிகர் திலகத்தை அவர் தம் கலைப்பணியை - சிறப்பை - திறமையை மனதில் கொண்டு மன்னரை வாழ்த்துவது போல் "கலைமகள் துணை கொண்டு கலை வென்று புகழ் கொண்ட காவலன் வாழ்க வாழ்க".

இயல் இசை நாடகம் முத்தமிழ் காக்கின்ற தலைவனே வாழ்க வாழ்க என இரண்டு அடிகளில் நமது நடிகர் திலகத்தைக் கவியரசு வாழ்த்தி எழுதியிருந்தார்.

இப்படிப் பல பாடல் வரிகள் மூலம் பாத்திரத்தோடு இணைந்து வெவ்வேறு படங்களில் வாழ்த்தியிருப்பார். இது கவியரசு அவர்களின் உயர் பண்பு.

அப்படிப்பட்ட பாராட்டுக்குரியவர் சிவாஜியொருவர்தான் என்பதை மேலும் தனது திரை அனுபவங்கள் மூலம் - நட்பின் ஆழத்துடன் விபரிக்கிறார் இயக்குனர் திருலோகசந்தர் அவர்கள்.

"பாட்டு மட்டுமல்ல எல்லாவித இசைக்கருவிகளையும் இயக்கும், வாசிக்கும் முறையும் அவருக்குத் தெரியும். ஏதேனும் இசைக்கருவியை அவர் வாசிப்பது போன்ற படக் காட்சிகளை உங்கள் நினைவுக்குக் கொண்டுவாருங்கள். அவர் எவ்வளவு உயிரோட்டத்துடன் நடித்திருக்கிறார் என்பது உங்களுக்குத்தெரியும். அதற்குமுன் அவர் மேற்கொண்ட முயற்சிகள் அந்த வாத்தியக்கருவிகள் பற்றியும் அதனை வாசிக்கும் முறையைப் பற்றியும். அவர் நுணுகி அறிந்து கொள்ளும் ஆர்வம் இவை கூட இருந்து பார்த்தவர்களை பிரமிக்கவைக்கும்.

ஒரு கலைஞனுக்குத் திறமை கால் பங்கு என்றால் அதை வளர்த்துக்கொள்ள அவன் எடுத்துக் கொள்ளும் முயற்சிகள் முக்கால் பங்கு.

அத்தகைய முயற்சி எதுவும் இல்லாமல் அவனுடைய திறமை பரிணமிக்காது, வளராது, பாராட்டுப்பெறாது என்பதற்கு சிவாஜி அவர்களின் வாழ்க்கை ஒரு உதாரணம்.

இன்றைய இளைய தலைமுறையினருக்கு - அவர்கள் எந்தத் துறையைச் சார்ந்தவர்களாயினும் சரி - சிவாஜி ஒரு பாடம்.

அவரது முயற்சிக்கு ஒரு உதாரணம் சொல்கிறேன். ரோட்டரி கிளப் சார்பாக ஒரு கலை நிகழ்ச்சிக்கு ஏற்பாடாகியிருந்தது. பல்சுவைநிகழ்ச்சிகளைக் கொண்ட அந்தத் தொகுப்பில் சிவாஜியின் நடிப்புக்காட்சியும் ஒன்று. "வீரபாண்டிய கட்டப்பொம்மன்" படத்தில் வசனம் பேசும் காட்சி கைகளில் சங்கிலியால் பிணைக்கப்பட்டு வெள்ளைத்துரையுடன் வீராவேசமாகப் பேசும் காட்சி அது.


அந்த நிகழ்ச்சி நடைபெறும் நாள் ரொம்பத்தள்ளி இருந்தாலும், சிவாஜி அப்போதிருந்தே மிகவும் பதட்டமாக இருந்தார். அந்தக்காட்சியை அவர் பல நாடகமேடைகளிலும் - சினிமாவிலும் பலமுறை நடித்துவிட்டார். ஆனாலும் என்னவோ அப்போதுதான் புதியதாக - முதன்முறையாக நடிக்கப்போவது போலப் பதட்டப்பட்டார். அந்த வசனத்தை வரவழைத்து பலமுறை படித்துப் பார்த்தார்.

திரைப்பட சூட்டிங் இடைவேளையின் போது இந்த வசனத்தை ஒத்திகை பார்த்துக்கொள்வார்.பனர்மான் (banner man) துரையாக வி. கோபாலக்கிருஷ்ணன் நடிப்பதாக ஏற்பாடு. சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் கோபியை வரவழைத்து இருவருமாகப் பல முறை ஒத்திகை பார்த்துக்கொண்டார்கள்.


தொடர்ச்சி 12 பக்

# 21ஆம் நூற்றாண்டில் கணணி இல்லாமல் மனிதன் வாழமுடியுமா?

-ராஜா சொக்கலிங்கம்
Computer Consultant



**பகுதி (4)**




இதுவரை உங்களிற்கு தெரிந்த கொழ்பியூட்டர் துறையைப் பொறுத்தவரை எந்த அளவிற்கு உங்களிற்கு தெரிந்து இருக்கின்றது என்பதை தெரிந்து கொள்ள இந்த வரைபடம் பயன்படும்.

இந்த இதழில் Main Board எனப்படும் Motherboard இன் விபரங்களை பார்க்க இருக்கின்றோம். இதேபோல் வரும் வாரங்களில் மற்றைய அனைத்து பகுதிகளையும் ஒவ்வொன்றாக பார்ப்போம் (Hardware as well as softeware )

இதை Motherboard என்று கூறும்போதே இதனுடைய அர்த்தத்தையும் அந்தஸ்தையும் பற்றி நீங்கள் புரிந்து கொள்வீர்கள். ஒரு குடும்பத்தில் தாய் ஒரு முக்கிய பாத்திரமாக விளங் குவது போலத்தான் இந்த Computer இலும் Motherboard விளங்குகின்றது. இந்த Motherboard இல் தான் எல்லாப் பொருட்களும் வந்து சங்கமமாகின்றன. எடுத்துக் காட்டாக CPU, Memory , Floppy drive, CD Rom, , Video Card, Sound Card, Modem Card, Key board, & Mouse என்பன அனைத்தும் ஒன்றிணையும் ஒரு தளம் தான் இந்த Mainboard. இந்த Main Board அத்தனை பொருட்களையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஒரு Chip CMOS (Complementary Metal Oxide Semi Conductor) என்றும் Bios என்றும் (Basic input output system) சொல்லப்படும். இந்த Mainboard இல எந்த அந்த அடிப்படையான பொருட்கள் இணைக்கப்பட்டு இருக்கின்றதோ அவைகளைப் பற்றிய விபரங்கள் இந்த Bios இல் பதியப்பட வேண்டும். இதைத் தான் CMOS Setup என்று சொல்வோம். இது மிகவும் நுணுக்கமான சிறிய முக்கியமான வேலை. இதில் ஏற்படும் சிறு தவறினால் கூட முழு கணணியும் இயங்காமல் போய்விடும்.

Computer இன் முதல் இயக்கம் இந்த Bios இல் தான் தொடங்குகின்றது. இந்த Motherboard இல்தான் உங்களுடைய Printer, Scanner என்பவையும் இணைகின்றது. இதுநாள் வரை இவை ஒவ்வொன்றிற்கும் தனித்தனி Port இருந்தது. இப்பொழுது புதிய கண்டுபிடிப்பாக இவை அனைத்தையும் இயக்கக் கூடியதாக ஒரு புதிய Port ஐ கட்டு பிடித்திருக்கிறார்கள். அதுதான் USB (Universal Serial Bus). இந்தப் Port இல் உங்கள் Printer முதல் அத்தனை பொருட்களையும் இணைக்கக் கூடியதாக அமைத்து இருக்கிறார்கள். உதாரணமாக Radio முதல் தண்ணீர் சுடவைக்கு கேத்தில் வரை மின்சார Plug ஒன்றுதான். அதேபோலத்தான் எந்த பொருள்களை இணைப்பதற்கும் இந்த USB ஒன்றுதான். இனிவரும் காலங்களில் மேலும் USB ஐப் பற்றி பார்ப்போம். இன்னும் Motherboard பற்றிய பலப்பல விபரங்களை அடுத்த சுற்றில் பல இதழ்களின் பின்பும் பார்ப்போம்.

மேலதிக தகவல்களிற்கு www.howstuffworks/category.computers.htm

(தொடரும்)

## உலக நாடுகள் வரிசையில் - கஜானா

(1ம் பக்க தொடர்ச்சி)

**பரப்பளவு:** 83,000 ச. மைல்
**மொத்த குடித்தொகை:** 805,000 பேர் (1992ஆம் ஆண்டில் புள்ளிவிபரப்படி)
**தலைநகரம்:** ஜோர்ஜ் ரவுண் [George Town]
**சுதந்திரம்:** மே 26, 1966 இல் பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து சுதந்திரம் பெற்றது.
**மொழி:** ஆங்கிலம் [வித்தியாசமான உச்சரிப்புக்களுடன் சேர்ந்த ஆங்கிலம்]
**சமயம்:** கிறிஸ்ரியன் - 57%, இந்து சமயம்- 33% முஸ்லீம் - 9%, ஏனையவை - 1%
**மக்கள் இனங்கள்:** இந்தியர்கள் 51% கறுப்பினத்தவர்களும் அதில் கலந்த இனத்தவர்களுள் 41%புராதன மக்கள் 4% ஐரோப்பியர்கள் சீனர்கள் 2%

இரண்டு தினசரி பத்திரிகைகள் இங்கு வெளிவருவது வழமையாகும்.

மக்களினால் தெரிவு 2செய்யப்பட்ட ஜனாதிபதி, பிரதமர், மத்திரிசபை என அமைக்கப்பட்டு நிறைவேற்று துறை அதிகாரிகள் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளன.

முன்னர் கறுப்பு இனத்தவர்களின் அரசாங்கம் நடைமுறையில் இருந்தது. இப்போது, கடைசி தேர்தலின் பின்பு இந்தியா வம்சாவளி தலைமையில் அரசாங்கம் நடைபெறுகின்றது.

முழு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி, உப ஜனாதிபதி, பிரதமர், உதவி பிரதமர், மந்திரிசபை என உருவாக்கப்பட்டு பத்து பகுதிகளாக பிரிக்கப்பட்டு நிர்வாகம் நடைபெறுகின்றது..

-மாலினி பஞ்சலிங்கம்


**Safety Truck**
**Training School Ltd.**

Training & Trucking
Classes A, D & Z

கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ்
TRUCK DRIVING பயிற்சி இடம் (6ம் ஆண்டு)
வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.




தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும். (One on One Training) அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்

In Classes
- 365 (Learning Permit)
- Lock Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்
YOGAN SOCKALINGAM
Truck Driving போதனாசிரியர்
(12 Years Canadian Experience with Trucks)
Tel: (416) 616-5979 / (905) 793-9546
250 Summerlea Road, Brampton, ON



EZ DRIVING SCHOOL



நவீன தன்னியக்க வாகனங்களில் சொந்த மொழியில் பயிற்சி விளக்கங்களுடன் அரச அனுமதி பெற்ற பயிற்சியாளரிடம் பயிற்சி பெற தொடர்புகொள்ளுங்கள்
JEYAKUMAR ✆ (416) 283-4100
Cell: 822-6741 (10 வருடகால அனுபவ பயிற்சியாளர்)


# விண்வெளி

## சூரியக்குடும்பம்:- 27

தருபவர்:- கனி

கடந்த சில இதழ்களில் கிரகணங்கள் பற்றிச் சற்று விளக்கமாகப்பார்த்தோம். இந்த அழகிய வான் நிகழ்வுகள் பற்றிய அறிவியல் சார்ந்த விளக்கத்தை ஓரளவுக்கேனும் அறிந்திருப்பீர்கள், விளங்கிக் கொண்டிருப்பீர்கள் என எண்ணுகின்றேன். சூரிய கிரகணமாயினும் சரி சந்திர கிரகணமாயினும் சரி ஒவ்வொரு மாதத்திலும் வரும் அமாவாசையிலோ அல்லது பூரணையிலோ வருவதில்லை. இது ஏன் என்பதற்கான விளக்கத்தை இன்று பார்ப்போம்.

சூரியனைப் பூமி சுற்றிவரும் பாதையை முற்றாக இணைப்போமாயின், சூரியன், பூமி, பூமி வலம் வரும் பாதை என்பன ஒரு தளத்தின் பரப்பில் இருக்கும். இதேபோல பூமி - சந்திரன், சந்திரன் பூமியை வலம் வரும் பாதை என்பன இன்னொரு தளத்தின், பரப்பில் இருக்கும். இவ்விரண்டு தளங்களும் ஒன்றாக இராது, வேறுவேறாக இருக்கின்றன. பூமி சுற்றும் தளத்தில் இருந்து, சந்திரன் சுற்றும் தளம் 5பாகைக்கு மேல் ஏறிக்காணப்படுகின்றது. இதன் காரணமாக எல்லா அமாவாசை நாட்களிலேயும் அல்லது பௌர்ணமி நாட்களிலேயும் பூமியின் நிழலுக்குள் சந்திரனோ அல்லது சந்திரனின் நிழலுள் பூமியோ அகப்படுவதில்லை. படம் I உங்களுக்கு விளக்கத்தை கொடுக்கும் என எண்ணுகிறேன்.




இந்தப்படத்தில் **N, N** எனும் இரண்டு புள்ளிகளைக் காண்பீர்கள். இவை பூமியின் தளத்தை சந்திரனின் பாதை வெட்டும் புள்ளிகள். இவற்றை **"கணு"** எனக் கூறுவார்கள். இக்கணுக்களை இணைக்கும் கோடு சூரியனை நோக்கி நிற்கும் போது கிரகணங்கள் ஏற்படும். வருடத்தில் இரண்டு தடவைகள் இந்தக் கோடு சூரியனை நோக்கிக் காணப்படும். எனவே வருடத்தில் இரண்டு தடவைகள் சூரியகிரகணம், சந்திரகிரகணம் தோன்றுவதற்கு சாத்தியக்கூறுகள் உண்டு. இனி இந்த **N,N** எனும் கணுக்கோடு மேற்கு முகமாக நகருவதை அவதானிக்கலாம். கிரகங்கள் கிழக்கு முகமாக நகர இந்த **N,N** எனும் புள்ளிகள் எதிர்த்திசையில் நகருகின்றன என ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். (இந்நேரம் எனக்கு ராகு, கேதுவின் ஞாபகமும் வருகிறது. இவைகூட கண்ணுக்குத் தெரியாது. கிரகங்கள் சுற்றும் திசைக்கு எதிர்த்திசையில் சுற்றுவதாகக் கூறுவார்கள். ஒருவேளை கண்ணுக்குத்தெரியாத **N, N** எனக் குறிப்பிட்டுக் காட்டப்பட்ட கணுக்கள்தான் ராகு, கேதுவாக இருக்குமோ?) இந்த **N, N** எனும் கணுக்கோடு மிகவும் மெதுவாகவே தனது திசையை மாற்றுகிறது. இதன் காரணமாக ஒவ்வொரு வருடத்திலும் சுமார் 3 கிழமைகள் முன்னதாக கிரகணங்கள் தோன்றுகின்றன. அத்துடன் இந்த **N, N** கோடு ஒரு பூரண சுழற்சிக்கு 18 வருடங்கள் 11 நாட்களில் பூரண சுழற்சி ஒன்றை முடிக்கின்றன. எனவே 18 வருடங்கள் 11 நாட்களின் பின்னர் இக்கிரகணங்கள் மீண்டும் அதேபோல அதே இடத்தில் தோன்றும். அதாவது கனடாவில் இன்று ஒரு கிரகணம் தோன்றுமாயின் 18 வருடங்கள் 11 நாட்களின்பின் மீண்டும் அதே போன்ற ஒரு கிரகணம் கனடாவில் தோன்றும்.


சரி இதுவரை காலம் கிரகணங்கள் பற்றிப் பார்த்தவைகளைச் சுருக்கமாக நினைவுபடுத்திப் பார்ப்போம். கிரகணம் என்பது சூரியனால் ஒரு வான்பொருளில் ஏற்பட்ட கருநிழலினுள் இன்னொரு வான் பொருள் வரும் நிகழ்ச்சியாகும் பூமியின் கருநிழலுள் சந்திரன் வருவது சந்திரகிரகணம். சந்திரனின் கருநிழலுள் பூமிவருவது சூரியகிரகணம். சூரியகிரகணம் அமாவாசை நாட்களிலும், சந்திரகிரகணம் பௌர்ணமி நாட்களிலும் நிகழும். எல்லா அமாவாசை நாட்களிலும் சூரியகிரகணம் ஏற்படாது. அதேபோல் எல்லா பூரண தினங்களிலும் சந்திரகிரகணம் தோன்றாது. சாதாரணமாக வருடத்தில் இரண்டு தடவைகள் சந்திரகிரகணம், சூரியகிரகணம் தோன்றச் சாத்தியம் உண்டு. ஒரு இடத்தில் கிரகணம் தோன்றினால் சுமார் 18 வருடங்கள் 11 நாட்களின் பின்பு அதே இடத்தில் அதேமாதிரியான ஒரு கிரகணம் தோன்றும்.

கிரகணங்கள் பற்றி ஓரளவேனும் அறிவியல் ரீதியில் தெளிவு பெற்றிருப்பீர்கள் என எண்ணுகிறேன். தொடர்ந்தும் சூரியக்குடும்பம் பற்றிய எமது பயணத்தைக் தொடர்வோம்.

### அதிகாலையில் எழுந்திரு!

காலை 4 மணிமுதல் 5 மணிக்குள் எழுந்திருப்பது நல்லது. அதிகாலையில் எழுந்தால் சுறுசுறுப்பு மட்டுமின்றி புத்தியும் தெளிவாக இருக்கும். ஏனெனில் மூளையில் புத்தி தெளிவை உணர்த்தும் நரம்பின் துவாரத்தில் நிறைந்திருக்கும் நீர் மிகவும் சுத்தமாக இருக்கும்.

**உங்கள் குழந்தையின் எதிர்கால கல்வியில் ஒரு சிறு தொகையை முதலிடுவதுடன்**



கனேடிய அரசின் கல்விக்கான மானியம் $400 இலவசம்!

★ TWO YEAR DIPLOMA program ஐ வெற்றிகரமாக முடிப்பதன் மூலம் சகல புலமைப் பரிசில்களையும் பெற முடியும்.



- அரச அங்கீகாரம் பெற்ற புலமைப் பரிசில் சேமிப்பு திட்டம்.(R.E.S.P)
- உலகின் எந்தப் பாகத்திலும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் கல்வி பெறலாம்.
- இன்னும் பல சலுகைகள் உண்டு.

இலவச ஆலோசனைகள் பெற எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு - **சீலன் .A**

***The Children Education Trust of Canada***

*Tel: (416) 451- 0271 pager: (416) 980-9836*

**RENOVATION**

**KATHIR & ASSOCIATES**




- ※ Complete Basement
- ※ Bath Rooms
- ※ Kitchen
- ※ Plumbing
- ※ Painting




போன்ற உங்களின் சகல விதமான திருத்த வேலைகளிற்கும் அழையுங்கள் : (416)804-5628

**V.N.T. AUTO COLLISION**

- * Complete Collision Service
- *Unibody Frame Straightening
- * Under Coating & Rust Proofing
- * All Mechanical & Electrical Repairs
- * உட்புற வெளிப்புற பராமரிப்பு
- *Tuneup & Brakes
- * Oil Change & Lubrication
- *Insurance Claims
- *Free Estimates



**200 FULLER ROAD**
**UNIT #4A**
**PICKERING, ONT.**
**TEL: (905) 426-5136**




**KD FINANCIAL SERVICES**

**Vamadevan Jeyamohan (Jey)**
**(President)**
**Royal Bank Approved Third Party Referral Agent**

**VISA CARDS UPTO $5000**

புதியவர்கள் (Fresh Credit) அல்லது நல்ல நிலையில் கிறடிற்றை (Good Credit History) வைத்திருப்பவர்களிற்கும் வேலை செய்யும் கடிதம் (Employment Letter) உடையவர்களிற்கும் விசா காட் எடுத்துத் தரப்படும்


Tel: (416) 431-9315 Fax: (416) 431-2119
Cell: (416) 575-8427 EmailL: Jeys@ica.net

தொடர்புகளுக்கு: **weekdays - 5:30pm - 10:00 pm.**

**Nada Jeyadevan** Financial Rep.
**Tel: -(416) 398-4760** 10:00Am - 8:00pm

## இலத்திரன்

இலத்திரன் என்பது கண்ணுக்குத் தெரியாத மிகமிகச் சிறிய துணிக்கை. எதிர்மின்னேற்றம் கொண்ட இந்தத் துணிக்கை பெருமளவு சக்தியை காவுகின்றது. இன்றைய உலகின் பல சக்தியின் விளைவுகளுக்கு இவ்விலத்திரனே காரணமாகிறது. சீரான விளக்கத்தையளிக்கிறது. இவ்விலத்திரன்களை மனிதன் இனம் கண்டு கொண்ட பின்னரே அறிவியல் துறை மிகவேகமாக வளர்ச்சியடையத் தொடங்கியது. இன்றைய உலகை நாம் "இலத்திரனியல் உலகம்" என வேண்டுமானால் கூறலாம். சரி இவ்விலத்திரன்களின் இருப்பிடம் எதுவென்று பார்ப்போமாயின் எல்லா இடங்களிலேயுமே இந்த இலத்திரன்கள் உள்ளன. பொதுவாக ஏல்லா அணைக்களிலும் பார்ப்போமாயின் எல்லா இடங்களிலேயுமே இந்த இலத்திரன்கள் உள்ளன. பொதுவாக எல்லா அணுக்களினும் அணுவின் அணுக்கருவை சுற்றி வெவ்வேறு பாதைகளில் பல இலத்திரன் அணுக்கருவை வலம் வருகின்றன. எந்தவொரு சுயாதீன அணுவும் இலத்திரன் இன்றிக் காணப்பட முடியாது.



அணுக்கருவில் இருந்து தூரமாக உள்ள பாதையில் வலம் வரும் இலத்திரன்கள் சிலசமயங்களில் அணுவை விலத்தி வெளிவரும். இவை சுயாதீன இலத்திரன்கள் எனப்படும். சிலசமயங்களில் பொருட்களில் உராய்வு ஏற்படுகையில் உராய்வினால் பிறப்பிக்கப்படும் சக்தியைப் பெற்று அணுக்களில் இருந்து இலத்திரன்கள் வெளிவந்து சுயாதீன இலத்திரன்கள் ஆகி பொருட்களில் தங்கிவிடும். சிலபொருட்களின் மீது காற்றின் உராய்வே இப்படி சுயாதீன இலத்திரன்களை பிறப்பிக்கப் போதுமானதாக இருக்கும். இவ்விலத்திரன்கள் உள்ள பகுதியை எமது உடல் தொடும் போது இலத்திரன்கள் எமது உடலின் ஊடாகப் பாய்ந்து பூமியை அடையும். இவ்விலத்திரன் பாய்ச்சலை எமது உடல் சிறிது வலியுடன் உணரும். இலத்திரன்களின் செறிவுக்கு ஏற்ப வலி கூடுதலாக இருக்கும். இதனையே நாம் Shock அதிர்ச்சி என்கிறோம். பனிக்காலங்களில் இந்த மின் அதிர்ச்சியை நாம் அதிகம் உணரலாம்.


T. S. AUTO
SPECIALIST TOYOTA HONDA
MOTOR VEHICLE SPECIALISTS
FOR COMPLETE AUTO WORKS AND DETAILING

உள்ளூர், இறக்குமதி செய்யப்பட்ட சகல ரக வாகனங்களுக்கும் அனுபவம் வாய்ந்த மெக்கானிக்குகளால் சிறந்த முறையில் திருத்திக் கொள்ள நாடுங்கள்

- We Sell Quality Used Cars
- Licensed Mechanics on duty
- Guaranteed Services
- Reasonable Rates
- Free Visual Inspection and Proper Advice
- Licensed to do Air Condition Services
- We Rebuild Alternators & Starters
- Rust Proofing

TUNE - UP •
BRAKES •
GENERAL MAINTENANCE •
ELECTRICAL WORKS •
ALL KIND OF REPAIRS •

OIL & FILTER CHANGE WITH CASTROL GTX

FINCH AVE. E
N
MARKHAM RD.
T.S.AUTO

Call: Kumar
Tel: (416) 293-3395 (416) 891-2893
2305 Markham Road #24, Scarborough, Ont. M1B 2W3



நான் ஒரு வழக்கறிஞர் இல்லை!
வாகன விபத்தில் பாதிக்கப்பட்டீர்களா?
முதலில் வைத்தியசாலைக்கு செல்லுங்கள் பின் இவரை அழையுங்கள்
எஸ்.கே.தீசன்
S.K.Theesan
416-631-6322
CRIMINAL
கிறிமினல் வழக்குகள்
DOG BITES
SLIP & FALL



Banana Leaf
BANANA LEAF
Take-out & Catering

Everyday Special
ஆடு, மாடு, புரியாணி Free வட்டிலப்பம் $5.50

தினமும் ஸ்பெஷல்

| | | |
|---|---|---|
| செவ்வாய், வெள்ளி | மரக்கறி சாப்பாடு 10 வகை கறியுடன் மத்தராஸ் தாளி FREE POTATOES PORI | $4.99 |
| புதன் | புட்டு, முட்டைப்பொரியல், இறால் குழம்பு சம்பல், பருப்பு | $3.99 |
| வியாழன் | 3ரொட்டி, சிக்கன் பாலுண்டி கட்டைச்சம்பல் | $3.99 |
| சனி, ஞாயிறு | மீன் சாப்பாடு, மரக்கறி வகைகளுடன் | $5.50 |
| ஞாயிறு | LampRice | $5.50 |
| திங்கள் | மூடப்பட்டிருக்கும். | |

431 Nugget Avenue, Unit 10, Scarborough, Ont. (Markham & Nugget)
Tel: (416) 609-9247 Pager (416) 600-1030, (416) 704-8208 (24hrs.)



AUTO REPAIR CENTRE FOR SALE
பல ஆண்டுகளாக ஸ்காபரோவில் KENNEDY/ELLESMERE பகுதியில் இயங்கிவரும் கராஜ் விற்பனைக்கு உண்டு. சகல உபகரணங்களுடன், கராஜ் தொழில்புரிவதற்கு அரசு அனுமதி பெற்ற பகுதியில் இந்த தொழிலகம் அமைந்துள்ளது. இதுபற்றிய மேலதிக தொடர்புகளிற்கு ராஜா மகேந்திரன் (416) 315-9397

# மதங்கள் தரும் பாடங்கள்

**தருபவர் - இந்து**

உலகிலுள்ள ஒவ்வொரு மதத்தினரிடம் உமது வேதநூல் எது என்று கேட்டால் குறிப்பிட்ட நூல்களைக் கூறுவார்கள். ஆனால் ஓர் இந்துவிடம் அந்த வினாவினைத் தொடுத்தால் பதில் தெளிவாக வராது. நால்வேதம் என்பவரும், பகவத்கீதை என்பவரும், உபநிஷத்தாரம் என்பவருமாக பதில்கள் பலவகைப்படும். இதற்குக் காரணம் என்ன? இந்துமதம் தவிர்ந்த ஏனையவை தீர்க்கதரிசிகளாக உருவாக்கப்பட்டவை. அந்த தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்ட அருள்மொழிகளே அவர்களது மதத்தின் வேதமொழி.

ஆனால் இந்து மதமோ கால அளவுகளுக்கு அப்பாற்பட்டு எந்த ஒரு தனிநபராலும் தேற்றுவிக்கப்படாமல் பண்டைய யோகிகள், சித்தர்கள், ஞானிகள், தவசிரேஷ்டர்களின் தவவலிமைகளால் கண்டு உணர்ந்து அறியப்பட்ட யோக ஞான உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. அதனாலேயே அதற்கென்று குறிப்பிட்ட வேதநூல் என்று தனிநூல் எதனையும் கொண்டிருக்கவில்லை.

உலகில் மனிதனின் வளர்ச்சியை நான்கு கட்டங்களாக பிரித்திருக்கிறார்கள். 1. Age of perception காணுவதால் ஏற்படும் காட்சி அனுபவ கட்டம். அதாவது ஆதி மனிதர்கள் அடிப்படை உணர்ச்சிகளுடன் மட்டுமே வாழ்ந்திருந்தார்கள். பசி, தூக்கம், இச்சை ஆகிய குணங்களுடன் வாழ்ந்தவர்களுக்கு சூரிய வெளிச்சம், மழை, இடி, மின்னல், இருள் போன்றவை மட்டுமே புலப்பட்டன. ஆனால் அவற்றைப்பற்றி ஆராய ஆதி மனிதன் துணியவில்லை. இந்த இயற்கை நிகழ்வுகளோடு மட்டும் ஒட்டி வாழ்ந்த காலகட்டமே காட்சி அனுபவ கட்டம் என்று கருதப்பட்டு வந்தது.

2. இரண்டாவது Age of observation அதாவது கவனித்து உணரும் கட்டம். மனிதன் தன்னைச் சுற்றியுள்ள உலகத்தையும் அதில் ஏற்படும் இயற்கை மாற்றங்களையும் கவனிக்கும் காலகட்டமே இதுவாகும். சூரிய ஒளி ஏற்படுவதையும் அதன் சூட்டின் மாறுபாட்டையும் மழைபெய்வதின் காரணத்தையும் பகல் இரவு மாறுபாட்டையும் கவனித்து உணரத் தொடங்கினான். இதுவே கவனித்து உணரும் கட்டமாகும்.

3. அடுத்து Age of Scientific Enquiry அதாவது கவனித்து உணர்ந்தவற்றை விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்து பார்க்கும் கட்டம். இரவு பகல் எப்படி உண்டாகின்றது? ஏன் அவ்வாறு நடக்கின்றது? மழையின் காரணி என்ன? உலகம் உருண்டையா? உலகைச் சுற்றி என்ன நடக்கின்றது? உலகிலுள்ள சக்தி என்ன? இவை ஒவ்வொன்றிற்குமான அறிவியல் பூர்வமான ஆதாரமென்ன என்று தேடத் தொடங்கிய காலகட்டம். இதுவே சாதாரண நாம் வாழ்ந்துவரும் இன்றைய காலகட்டம். இந்த விஞ்ஞான ஆராய்ச்சிக்கு முடிவில்லாமல் தொடர்ந்து ஆராய்ச்சி இடம்பெற்றுக் கொண்டே இருக்கின்றது. இன்றுவரை இயற்கையில் பல விடயங்கள் ஆராய்ச்சிக்கு எட்டாதவையாகவே இருந்து வருகின்றன. இவ்வாராய்ச்சி வெளி உலக நடவடிக்கைகளுக்கு மட்டுமே முடிவு செய்யக்கூடிய விடயமாகும்.

இரசாயனம், பௌதிகம், தாவரவியல், விலங்கியல், கணிதம், சுகாதாரவியல் என்று பலவகை வழிகளிலும் மிகமிக நுட்பமாக ஆராய்ந்து புதுப்புது விதிகளையும், காரண காரியங்களையும் அதற்குரிய மாற்றீட்டு முறைகளையும் கட்டுப்படாத சில நியதிகளையும் நியமங்களையும் கூட கண்கூடாக காணக்கூடியதாக உள்ளது.

4. நான்காவது Age of Contemplation. விஞ்ஞான ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்ட நியதிகளுக்குரிய காரணகர்த்தா. அதாவது இயற்கையின் வெளிப்படை விளைவிற்கு அப்பாற்பட்ட விடயங்களில் ஆராய்ந்து பார்க்கத்தோன்றுகின்ற சுய சோதனைக்கட்டமே இதுவாகும். மதங்களை உருவாக்கிய ஞானிகளும், தத்துவ நூல்களை எழுதிய மகரிஷிகளும் இதையே உணர்ந்தார்கள். விஞ்ஞானங்களுக்கு அப்பாற்பட்ட மெஞ்ஞான உணர்வைப் புரிந்து கொள்ளும் இந்த நான்காவது காலகட்டம் மிகச் சிறந்தது. அழிவில்லாதது, முடிவானது.

(தொடரும்)


**INCOME TAX**

உங்களுக்குரிய பணத்தை விதிகளுக்கமைய மீளப்பெற அழையுங்கள் - **LINGAM**

**Tel: (416) 287-9818**


**SCARBOROUGHH, ETOBICOKE**

**STORM DOOR ! STORM DOOR !**

**உங்களுடைய வீட்டின் நுழைவாசல் கதவு பனியினால் பாதிக்கபடுகின்றதா?**

**STORM DOOR**

அமைத்திடவும், இருப்பதை திருத்திடவும், உங்கள் வசதிக்கேற்ப அமைத்திடவும்...



உகந்த அளவுகள் !

தரமான அமைப்பு !

குறைந்த செலவு !

தரமான வேலைப்பாடு !

இலவச ஆலோசனைகள் !

**உங்கள் தேவைகளுக்கு அழையுங்கள்**

**(905) 790-2902 (905) 676-9741**

# ரதீக்கா நகை மாளிகை

- உங்கள் விருப்பமோ குறைந்த விலையில் வாங்குவது, எங்கள் விருப்பமோ இனிமேல் யாரும் குறைக்க முடியாத விலையில் தருவது
- உங்கள் விருப்பமோ குறித்த தவணையில் பெறுவது, எங்கள் விருப்பமோ ஒருநாள் ஏனும் முந்தியே தருவது
- உங்கள் விருப்பமோ இந்த நகைகளை எங்கே வாங்கியது என நண்பர்கள் கேட்பது, எங்கள் விருப்பமோ ரதீக்காவில் வாங்கியது என நீங்கள் பெருமையுடன் சொல்வது
- தாலிக்கும் நகைகளுக்கும் ஓடர் கொடுத்தாச்சு, காரை எடு இனிக் கூறை அலுவலைப்பார்ப்பம் என்று அலைய வேண்டாம். ரதீக்கா நகைமாளிகையும் மஞ்சுளா பஷனும் ஒரே இடத்தில்.
- இப்பொழுது புதிதாக அமைக்கப்பட்ட மிகப்பிரமாண்டமான காட்சியறையில் ரதீக்கா நகைமாளிகை உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது.

ரதீக்காவின் புதிய விலாசம்

**RATHICKA JEWELLERY**

**5635 Finch Ave. East, Unit 3,** (Finch and Tapscott)

**Scarborough, Ontario, M1B 5K9, Canada**

**Tel: (416) 299-1343**

**RAAJ WATCH WORK**



சகல விதமான மணிக்கூடுகளும் (Watch & Clock) குறைந்த கட்டணத்தில், உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் திருத்திக் கொள்வதற்கு நகரில் நாட வேண்டிய ஸ்தாபனம்.

**NATHAN ☎: (416) 265-5580**

2885 LAWRENCE AVE. EAST , BRIMLY/ LAWRENCE (Close to Biway)



# "ராசம்மாவின் ராஜ்யம்"

நகைச்சுவைத் தொடர்... (15) ~கலகலப்பு தீசன்~

☺சிரிக்க 😐சிந்திக்க

ராசாத்தியக்கா ஐந்தாம் வகுப்பு படித்தாலும் படிப்பில் குறைந்த மாதிரி காட்டமாட்டா.

நெல்சன் மண்டேலா ஜெயில் சென்றதிலிருந்து மத்திய சிறைச்சாலையில் சிறைப்பட்ட ஜெயலலிதா எவ்வளவு எடை குறைந்தது. நுடிக்கும் படங்களின் பாடல் காட்சியில் எத்தனை உடைகள் மாற்றினார் என சகல சர்வதேச செய்தித் தொகுப்பை சன சந்திகளில் அவிழ்த்து விடுவதால் இன்று B.A., B.sc. படித்தவர்களை விட ராசாத்தியக்கா அறிவுத்திலகமாக விளங்குகின்றா.



பனிப்புயல் குறைகிறது நாட்டிலும் வீட்டிலும் பற்பல பிரச்சினைகள் அதனிடையே எத்தனையோ நிகழ்ச்சிகள். இனியென்ன சிவராத்திரி அந்தமாதிரி என ராசாத்தியக்கா சொல்ல ராசம்மாக்கா முணுமுணுத்தா.

என்ன ராசாத்தி எங்கை சிவராத்திரி கனடா வந்த பிறகு எத்தனை பேருக்கு படுக்கிற கட்டில் எங்கை கிடக்கெண்டே தெரியாது. பிள்ளையளின்ரை மூஞ்சை முகம் தெரியாது. 2 வேலை 3 வேலை எண்டு MGR எம். ஜி. ஆர் படத்து பாட்டு மாதிரி ஓடி ஓடி உழைக்கஹும், கிறடிட் காட்டுக்கெல்லாம் கட்டஹும் எனப் பாய்ந்தார் உலகர். ஏன் ராசாத்தி நாங்கள் அங்கை இருக்கேக்கை கறன்ற் வராத காலத்திலும் மண்ணெண்ணை விளக்கு (லாம்பு) கொண்டு விடிய விடிய தோட்ட வேலை செய்யேல்லியோ என வசனப் புயல் வீச இனி ராசம்மாக்காவுக்கு சப்போட் பண்ணினால் உலகரோடை வாதம் செய்ய முடியாது என உணர்ந்த ராசாத்தியக்கா வாஜ்பேய் அரசைக் கவிழ்த்த தமிழக வனிதை போல திடீரென கட்சிமாறிய ராசாத்தியக்கா அதுதானே அங்கேயும் நாங்கள் கஸ்டப்பட்டனாங்கள் தானே என உலகர் மனம் குளிர தனது வாக்களிப்பை உலகருக்கு வழங்கி இதேவேளை ஒட்டாவா ஊர்வலத்தில் கலந்துவிட்டு வந்த களை மாறமுதல் ரொறன்றோ ஊர்வலத்தில் உணர்ச்சியுடன் கத்திவிட்டு ரூபனும் ரூபியும் உள்ளே வரவும் பிள்ளை . . . ஸ்னோ (Snow) சப்பாத்தை கழட்டிப்போட்டு வாங்கோ என்று ராசம்மாக்கா சொல்ல . . . வட் . . .? என்று ஊர்வலத்தில் கத்தியதைவிட சற்று உரத்தே கேட்ட ரூபி கதகளி ஆடுவதுபோல இரு சப்பாத்தையும் காலாலேயே கழட்டி எறிய . . . எட . . . ராசம்மாவின் முகத்தில் அடிச்சமாதிரி ஏன்புள்ளை உப்புடி செய்கிறாய் என ராசாத்தி கேட்க . . .
மெல்லமாக . . . ஆறுதலாக உலகர் ராசாத்தியையும் ராசம்மாவையும் பார்த்துக்கேட்டார் கலியாணவீட்டிற்கு எப்ப நாள் வைக்கச்சொன்னீர்கள் என்று கேட்க தீபாவளிக்கு வாங்கிய சாரியில் கண்ணைக் கசக்கியபடி ராசமாக்கா (kitchen) குசினிக்குள் நுளைய . . . . உலகண்ணை மனிசன் கவலையிலை இருக்கேக்கையும் உங்களுக்கு பகிடி . . . என்று மெல்லிய குரலில் கூற "இடுக்கண் வருங்கால் நகுக". இதன் கருத்தென்ன பிள்ளைகளே . . . CTBC வானொலியில் சாந்தாக்கா சிறுவர் மன்றம் நடத்த . . . ரேடியோவைக்கேள் என்றபடி உலகர் அறைக்குள் போனார்.




ரூபி . . . இங்கு வாரும் என ரூபன் கூப்பிட . . . வட் என்று அதேதொனியில் கேட்க . . . இப்ப . . ஓ . . . இப்ப என்ன நடந்தது என்று கேட்கப்போறியள். இஸ் . . . இற்? ஏன் அதுக்கு கத்துறீர். . . O.K., O.K.
நான் கதைக்கிறது உங்களுக்கு கத்துறமாதிரி இருக்கு. உஷ் . . உந்த உஷ்சை கொண்டு போய் உங்கடை அப்பா -- அம்மா பக்கத்திலை நிக்கிற உங்கடை அம்மாவின்ரை எக்ஸ்ராவீல் (extra வீல்) ராசாத்தியென்று காட்டுங்கோ. ஐ கேற் ஓல்ட் பீப்பிள். எனக்கு வயது போனாக்களைப் பிடிக்காது. எல்லாம் பட்டிக்காடுகள். எப்பவும் அட்வைஸ் பண்ணுறதுதான் வேலை ரூபன் ஐ ரோல்ட் யூ உமக்கு முதலே சொன்னனான்.

ஈரான் ஈராக் சண்டைக்கு காரணம் இருந்தது.
ஈராக் குவைற் சண்டைக்கு காரணம் இருந்தது.

பாகிஸ்தான், இந்தியா, காஸ்மீர் சண்டைக்கு காரணம் இருந்தது.

இலங்கை அரசு தமிழீழ சண்டைக்கு காரணம் இருக்கிறது.
ஆனால் இன்று இங்கு நடைபெறும் சண்டைக்குள்ள காரணங்கள்:



பிள்ளை ஏன் சாப்பிடவில்லை - உடனே 911
ஏன் ஸ்கூலால் லேற் - உடனே 911
கெட்ட நண்பர்களுடன் சேராதே - உடனே 911

கவலையடைகிறார்களே என கஸ்டப்பட்டு குடும்பங்களை ஒன்றிணைய ஸ்பொன்சரில் கூப்பிடுவது. சிறு காரணத்திற்காகவும் குடும்பங்கள் பிரிவது. . .

இருமல் மூலம் அவர்கள் பேசுவது தனக்கும் கேட்கிறது என்பதைக் காட்டிக்கொண்டு உலகர். . .
ரூபன் பெரியாக்கள் அட்வைஸ் உங்களுக்கு தேவையில்லை. ஆனால் நாங்கள் உங்களை பெத்து day care இலும் Night Care இலும் விடேல்லை.

சப்பாத்தைக்கழட்ட சொன்னதுக்கு சர்வதேச லெவல்லை சண்டை நடக்குதென்டா . . . ராசா நீ கொடுத்து வைச்சது அவ்வளவுதான் என்று கூறிவிட்டு ரூபி சப்பாத்து கழட்டிய இடத்தில் உள்ள சேற்று தண்ணீரை மொப்பண்ணத்தொடங்கினார் உலகர்.

நோ, நோ சொறி என்றபடி உலகர் மொப்பண்ணிக் கொண்டிருந்த தடியை பறித்தாள் ரூபா.


கிரகப் பொருத்தம் பார்த்தல்
சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்பு கணித்தல்
பலன் பாத்தல்
எண் சோதிடப்படி ஆலோசனை கூறுதல்
☎: 299-8361



Compu Service
COMPUTERS & NETWORK
(416) 399-3235 - (905) 432-2422
CONTACT - ALAN SIVA
@ (416) 431-3753
(416) 438-4357
(416) 399-3235
COMPUSERVICE International
COMPUTER SALES
NEW & USED
NETWORK DESIGN
& INSTALLATION
(905) 432-2422
REPAIRS
UPGRADES
CD BACKUPS
SOFTWARES
*FAX: (416) 431-5828
Email: compuservice@pathcom.com


## கனடா கந்தசுவாமி கோவில்

### நிரந்தர ஆலய காணியும் கட்டிடமும் கொள்வனவு

ரொரன்ரோவில், ஸ்காபுரோவில் 1940 Elles mere Rd. #21 இல் அமைந்திருக்கும் கனடா கந்தசுவாமி கோவிலுக்கான காணி 15 ஆயிரம் சதுரஅடி கட்டிடத்துடனும் போதிய அளவு வாகன தரிப்பிட வசதியுடனும் 2 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்புடனும் 26 01, 2000 புதன் கிழமை கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

ஆலயத்தின் பேரில் கொள்வனவு செய்யப்பட்ட இச் சொத்தின் விலை பதினொரு லட்சத்து 30 ஆயிரம் டொலராகும். இதில் 4 இலட்சத்து 30 ஆயிரம் பணமாகவும் மிகுதி மோட்கேஜ் ஆகவும் கொடுக்கப்பட்டுள்ளது.

புதிய நிரந்தர விலாசமான ஆலயம் ஸ்காபுரோவில் 733 Birchmount Rd. இல் (Birchmount & Eglinton) அமைந்துள்ளது.

இவ்ஆலய சொத்து கொள்வனவிற்கு நிதி உதவி தந்துதவிய அடியார்கள், கடன் உதவியோர்கள், தொண்டாற்றியவர்கள் மற்றும் உதவிகள் நல்கிய பக்தி மான்கள் அனைவருக்கும், ஆலய அறக்காவலர் சபையினரும் திருப்பணிச் சபையினரும் நன்றி கூறிக் கொள்கின்றனர்.

தொடர்புகளிற்க்கு (416) 438-1882

(7ம் பக்க தொடர்ச்சி)

கோபி வர இயலாத நாட்களில் வசன பக்கங்களை என்னிடம் கொடுப்பார் சிவா நீங்க தான் பானர் மான் ம் சொல்லுங்க என்று கேட்டு நாங்கள் இருவருமாக வச பரிமாற்றம் செய்து கொள்வோம்.

அவருடைய ஈடுபாடு ஆர்வத்தை கண்டு நான் பிரமித்தேன் அந்த காட்சி வசனமோ அவருக்கு புதியதல்ல ஆனாலும் ஏன் இப்படி இம்சைப்பட்டுக்கொள்கிற ஆதுதான் அவருடைய தனிச்சிறப்பு. அவர் திறமையான கலங்கரை விளக்கம்.

குறிப்பிட்ட நாளும் வந்தது மியுசிக் அக்கடமியில் கலை நிகழ்ச்சி மேக்கப் அறைக்கு வந்து தன் கதர் சட்டையை களைந்துவிட்டு நாற்காலியில் அவர் அமர்ந்த தோரணையைப் பார்த்து நான் அசந்துவிட்டேன். ஆம்! ஆதுவே கட்டபொம்மனை நினைவு ஊட்டியது. மேக்கப் முகத்திலும் உடம்பில் ஏற ஏற அவருடைய கம்பீரம் கூடியது. நெஞ்சு நிமிர்ந்தது. கண்களை உருட்டிப் பார்ச் பார்வையில் கட்டபொம்மன் நிதர்சனமாகத் தெரிந்தான். கைகள் முறுக்கேறின அமர்ந்த கம்பீரம் வலுப்பெற்றது. அக்கம்பக்கத்தில் இருந்த எங்களை அவர் பார்த்த பார்வையிலிருந்தே அங்கே சிவாஜி கணேசன் மறைந்து விட்டதையும் கட்டபொம்னாக உருமாறி விட்டதையும் எங்களால் உணர முடிந்தது. எத்தல ஈடுபாடு! ஆத்மார்த்தமாக ஒன்றிப்போன தன்மை.

ஆதேசமயம் அங்கே அந்த நிகழ்ச்சி சம்பந்தமாக இந்தி நடிகர் சத்துருக்கன் சின்கா வந்தார். சிவாஜிடம் அவர் வணக்கம் சொல்லியதை தன் விழிகளை

ஊருட்டி ஒரு பார்வை பார்த்தார் சிவாஜி. சத்துருவுக்கு என்ன தோன்றியதோ கூப்பிய கைகளை மடித்தபடி நின்று விட்டார். சிவாஜி சைகையாலேயே சற்றுத்தள்ளியிருந்த ஒரு பெட்டியை கணபித்து அதில் அமரச் சொன்னார். மந்திரத்திற்கு கட்டுப்பட்டவர் போல் சத்துருக்கன் சின்கா பெட்டியின் மீது அமர்ந்து கொண்டார்.

(இயக்குனர் ஏ.சி. திருலோகச்சந்தரின் அனுபவங்கள் தொடர்கின்றது.)

–வீணைமைந்தன்.



# ஒன்ராரியோ மாகாணத்தில் வாகனம் செலுத்துதல்

- சிவ பஞ்சலிங்கம்

## பகுதி (24)

முதலாவது வீதிப் பரீட்சையின் போது (G(1) Road test) பரீட்சை மதிப்பீட்டுத்தாளில் எவ்வாறு ஒருவரின் வாகனம் செலுத்தும் தகமை மதிப்பீடு செய்யப்படுகின்றது என்பதனை முதல் மூன்று பகுதிகளையும் பார்த்தோம். இவ் அத்தியாயத்தில் அதன் அடுத்த பகுதிக்கு செல்வோம்.

**4. Intersections / R.R. crossing**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Fails to observe properly / controlled / uncontrolled intersections | ☐ | ☐ | ☐ | ☐ |
| Fails to obey signs or signals / pavement markings .............. | ☐ | ☐ | ☐ | ☐ |
| Late in slowing / stopping / slows too soon .............................................. | ☐ | ☐ | ☐ | ☐ |
| Stopping position: too soon or blocks crosswalk / intersection .............. | ☐ | ☐ | ☐ | ☐ |
| Right-of-way observance: ped. / self / other vehicle ................................ | ☐ | ☐ | ☐ | ☐ |

(4) Inter Sections / R.R. Crossing சந்திகளையும் புகையிரத பாதைகளையும் கடத்தல்

கட்டுப்பாடு உள்ள சந்திகளையும், கட்டுப்பாடு இல்லாத சந்திகளையும் கடந்து வாகனம் செலுத்தும் போது ஏனைய வாகனங்கள், சையிக்கிள்கள், பாதசாரிகள் எவராவது ஒழுங்கு வீதிகளை மீறி குறுக்கே வருகின்றார்களா என்பதனை பூரணமாக தலையை திருப்பி அவதானிக்க வேண்டும். ஏன்பதனையே இவ் சொற்றொடர் வலியுறுத்துகின்றது.

இச் சொற்றொடரில் "சந்திகள்" எனும் போது இரு சொற்றொடர்கள் உள்ளன.

(A) Fails to observe properly controlled/uncontrolled intersection.

(கட்டுப்பாடுள்ள சந்திப்புகள்) Controlled intersection

பச்சை, சிவப்பு, மஞ்சள், ஒளி சைகை, அல்லது மற்றும் "நிறுத்துகை" குறியீடுகளின் (stop sign) மூலம் வாகனங்களின்மேற்குறிப்பிட்ட சைகைகள் குறியீடுகள் எதுவுமே இல்லாத சந்திப்புகளை இது குறிக்கும். அநேகமாக வீடுகள் உள்ள உள் ஒழுங்கையில் இவைகள் காணப்படும்.அசைவுகள் ஒழுங்கு படுத்தப்படும் சந்திகளே கட்டுப்பாடுள்ள சந்திகள் ஆகும்.

Uncontrolled intersection (கட்டுப்பாடு அற்ற சந்திப்புகள்)

(B)Fails to obey signs or signals/pavement markings

...தியில் உள்ள ஒளி சைகைகள், குறியீடுகள், மற்றும் நில குறியீடுகள் ஆகியவற்றினை அணுகும் போது எப்படி ஒழுங்கு முறைகளை தவறாமல் கடைப்பிடிக்கப் படுகின்றதா என்பதே இச் சொற்றொடரில் கருதப்படுகின்றது. ஒவ்வொரு இடத்திலும் வெவ்வேறு விதி முறைகள் உள்ளன. முக்கியமாக "ஒளி சைகைகள்" மற்றும் "சைகைகளில்" உள்ள ஒழுங்கு விதி முறைகளை மீறும் போது அது வீதி ஒழுங்கு சட்டங்களையே மீறிய குற்றத்திற்கு ஆளாக வேண்டிவரும்.

வீதி பரீட்சைகளில் வீதி ஒழுங்கு சட்டங்களை மீறும் எந்தவொரு சிறு தவறுக்கும் மன்னிப்பே கிடையாது. பரீட்சையில் வெற்றி வாய்ப்பினை இழக்க வேண்டியதுதான்.

(C ) Late in slowing/stoping/slows too soon.

"Late in slowing" இச் சொற்றொடர் "Slows too soon" என்னும் சொற்றொடருக்கு எதிர் மறையாக நடைமுறையில் உள்ளது.

ஒரு சந்தியில் வாகனத்தினை நிறுத்த வேண்டுமானால் வாகனத்தின் வேகத்தினை குறைத்து கொண்டே வருவது வழமையாகும். ஆனால் அவ் வாகனத்தின் வேகத்தினை மிக சந்திக்கு அண்மையாக வந்து நிறுத்துவதற்காக குறைப்பதும், முதல் சொற்றொடரினையும், சந்திக்கு மிக தொலைவில் வரும் போதே சந்தியில் நிறுத்துவதற்காக வேகத்தினை குறைத்து கொண்டு வருவதனை இரண்டாவது சொற்றொடரும் வலியுறுத்துகின்றது.

இதில் மிக நெருங்கி வந்து வேகத்தினை குறைப்பதும், அல்லது மிக தொலைவில் வரும் போது வேகத்தினை குறைத்து வருவதும் தப்பாகும். கணக்கான தூரத்திலிருந்து கணக்கான முறையில் வேகத்தினை குறைத்து வந்து நிறுத்த ...ண்டும் என்பதே இச் சொற்றொடரில் கருதப்படுகின்றது.

(D) Stopping, position: Too soon or blocks cross-walk/intersection.

நிறுத்தும் தன்மை" பற்றி தெளிவு பண்ணுகின்றது. கடந்த அத்தியாயங்களில் வீதி ஒழுங்கு சட்ட விதவ் சொற்றொடர் ஒரு சந்தியில் வாகனத்தினை "களின் படி "சட்ட ரீதியான நிறுத்துகைகள்" எவை என்பன பற்றி ஆய்வு செய்திருந்தோம். இவ் சொற்றொடரினூடாக பரீட்சையில் இது பரிசீலனை செய்து பார்க்கப் படுகின்றது.

"சட்ட ரீதியான நிறுத்துகைகள்" என்னும் ஒழுங்கு விதியின் படி ஒரு வாகனத்தின் முன் சக்கரம் சந்தியில் உள்ள

I )தடித்த வெள்ளை கோட்டோடு அது இல்லாவிட்டால்

ii) நடை பாதை முன் விளிம்புடன், (தடை பாதையினை குறுக்கே தடை செய்யாது) இவை இரண்டும் இல்லாவிட்டால்,

iii) வீதியோர விளிம்புடன் நிறுத்தப்படல் வேண்டும் என்பதே குறிப்பிடப்பட்ட விதியாகும்

மேற்குறிப்பிட்ட மூன்று இடங்கள் தவிர்ந்து சற்று சந்தியினை அடைய முன்பு தொலைதூரமாக ஒரு நிறுத்துகை சைகைக்காக அல்லது சிவப்பு ஒளி சைகைக்காக நிறுத்தினால் அதுவே "Too soon" என்ற தப்பான சொற்றொடராக கருதப்படும. இதே போல் நடை பாதையினையோ அல்லது (Blocks cross walk) அல்லது சந்தியினையோ (Blocks intersection) தடை பண்ணுவது போல நிறுத்தக் கூடாது.

இத்தைகைய நிறுத்துகையில் தப்பு ஏற்படும் போது அது ஒரு தப்பாக இவ் சொற்றொடரின் கீழே பரீட்சையினரால் அடையாளமிடப்படும்.

(V) Right - of - way observance ped/self/other vehicle

சந்தியினை அணுகும் போது பாதை முதல் உரிமையும் அவதானமும் என்பதே இங்கு குறிப்பிடப்படுகின்றது. இங்கு பாதை முதல் உரிமை என்பதும் மூன்று வகையாக கருத்தில் கொள்ளப்படும்.

"Ped" means "Pedestrian" அதாவது "பாதசாரிகள் என்போருக்கு வழங்கப்படும் முதல் உரிமை. பாதசாரிகளுக்கு எந்நேரமும், எச் சந்தர்ப்பத்திலும் முதல் உரிமை ஆக வாகன சாரதிகளும் வழங்கப்படல் வேண்டும் என்பது கண்டிப்பான விதியாகும்.

"Self" இல் சொற்றொடரின்படி எவராவது ஒரு வாகன சாரதி சந்தி ஒன்றில் தமது முதல் உரிமையினை பயன்படுத்தி அதை தவறுபவராக இருந்தால் அதுவே இச் சொற்றொடரில் குறிப்பிடப்படுகின்றது.

"Other vehicle" இல் சொற்றொடரில் சந்தியில் வரும் போது ஏனைய வாகனங்களுக்கு வழங்க வேண்டிய முதல் உரிமையினை வழங்குவதற்கு தவறுவோமாக இருந்தால், அதுவும் மிகவும் கண்டிப்பான விதியாகும்.


NEW Technology
Security and Sound Inc.




REMOTE CONTROL CAR STARTER WITH ALARM




HARADA®
REMOTE CONTROL
CAR STARTER
*Standard range 500 feet
*Keyless entry




Remote Starter




*Auto Security
*Auto Starter
*Pager
*Big Display
*Quarter Mile Range

Phone : 416-335-4070 Fax : 416-335-9936
Moe - Cell : 416-451-0287 Shanger - Cell: 416-451-4517




80 Dynamic Drive,
Unit# 25,
Scarborough, Ont.
M1V 5A5


பெண்ணே நீ சிரிப்பதை
முதலில் நிறுத்து ஏன் எனில்
நாட்டில் பூகம்பம் அதிகரித்துள்ளது
அது வீட்டிலும் வேண்டுமா?

# சாரதிகளே!


# TRAFFIC TICKET

## பெற்றீர்களா?



- Speeding
- Stop Sign
- Red Light
- Seat Belt
- Improper Turn

**Peter Joseph**



- Careless Driving
- Accidents
- Fail to Remain/Report
- Over speed
- Impaired Driving
- Drive under suspension
- Dangerous Driving

- ஒரு முறை அழையுங்கள்.
- உண்மையை உணருங்கள்
- நண்பர்களுக்கும் கூறுங்கள்

**$150 மட்டுமே**

புள்ளிகளைக் காப்பாற்றுங்கள
முற்பணம் தேவையில்லை
நீங்களும் வரவேண்டியதில்லை
தேவை உங்கள் ரிக்கட் மட்டுமே

24 மணி நேர சேவை

பல ஆண்டுகள் வெற்றியின் அனுபவங்கள் **பீற்றர் ஜோசப்**

## Traffic Ticket Specialists

## Tel: (416) 537-7737 Fax: (416) 537-9035


## நிதியும் மூலதனமும்

**6 காரணங்கள் கனடாவில் மாத்திரம் முதலீடு செய்வதால் ஏற்படும் தாக்கம்**

1. உலக பங்குச் சந்தை (Stock Market) யில் கனடா ஆக 2 - 3 % உள்ளடக்கி உள்ளது. அதாவது நீங்கள் பங்குச் சந்தை வியாபாரத்தில் முன்னேற வேண்டுமெனில் வெளிநாட்டில் குறிப்பாக அமெரிக்காவில் முதலிடுவது சிறந்தது.
2. கனடா மிக பெரிய கம்பனிகளாக ஒரு சில கம்பனிகளே உள்ளது.
3. ஒரே இடத்தில் முதலிடுவதால் அதாவது உங்களுடைய Risk (தாக்கம்) அதிகமாக உள்ளது. எனவே முதலீடுகளை பரவலாக வைத்திருப்பதால் தாக்கம் குறைவாக இருக்கும். (Divesifi Cation)
4. உலகத்திலே அதிகூடிய பங்குச் சந்தை வியாபாரம் அமெரிக்காவிலே உள்ளது.
5. கனடாவிலும் பார்க்க மற்றைய நாடுகளில் கூடிய வட்டியிலுள்ள Bonds வகைகளை வாங்க கூடியதாக உள்ளது.
6. Emerging Makets Offer Different investing Opportunities than mature markets like Canada's .

CALL FOR MORTGAGE & LOAN

*Jay Ahamparam - 416-498-4743*

**தமிழர் வகைதுறைவள நிலையம் வழங்கும்**

10வது ஆண்டு சிறப்பு நிகழ்வுகள்

## நாளைய நாளும்
## நேற்றைய நேற்றும்

*நாடகங்கள் * நாட்டிய நாடகம்
*இசை நிகழ்வு * கவிதா நிகழ்வு

ஜீலை 01, 2000 சனிக்கிழமை மலை 6:00 மணி
York Woods Library Theatre
1785 Finch Ave. Weat (Keele /Finch)

தமிழர் வகைதுறைவள நிலையம் (416) 975-4750

## நினைவில் நிலைத்து நிற்கவேண்டியவை

1. வருடத்திற்கு ஒருமுறை ஜனாதிபதியை தெரிவு செய்யும் நாடு எது?
   **சுவிட்சலாந்து**
2. திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் யார்?
   **ஜி. யூ. போப்**
3. இரண்டாம் உலகப்போரில் பங்கெடுக்காத நாடு எது? **கனடா**
4. மனித உரிமை தினம் ஒவ்வொரு வருடமும் எப்போது கொண்டாடப்படுகின்றது? **டிசெம்பர் 10 ஆம் திகதி**
5. புதிய உலகம் என்று அழைக்கப்படும் நாடு எது? **அமெரிக்கா**
6. சிறுநீரகத்தில் யூரியாவை பிரித்தெடுக்கும் பகுதி எது?
   **நுண்ணிய சிறுநீரகக் குழாய்கள்**
7. அண்மையில் எந்த நாடு காந்தியின் பிறந்தநாளை தேசிய நாளாக அறிவித்தது? **தென் ஆபிரிக்கா**
8. இந்தியாவிலே ஆங்கிலத்தை ஆட்சி மொழியாக கொண்ட மாநிலம் எது?
   **நாகலாந்து**
9. நமது உடலில் இரத்த ஓட்டம் இல்லாத இடம் எது?
   **விழிவெண்படலம்**
10. அவுஸ்ரேலிய நாட்டுத் தேசிய சின்னம் எது? **கங்காரு**
11. சாதாரண மனித உடலில் காணப்படும் இரத்தத்தின் அளவு? **5 லீற்றர்**
12. எல்லா பொருட்களிலும் மிகவும் கடினமானது எது? **வைரம்**
13. மிகப் பெரிய பாலூட்டி எது? **திமிங்கலம்**
14. பாரதியார் ஆரம்பித்த பத்திரிகை எது? **சுதேசமித்திரன்**
15. மனிதனைப் போல் நடக்கும் ஒரு பறவை எது? **பென்குயின்**
16. இராவணன் மகனின் பெயர் என்ன? **இந்திரஜித்**
17. முகமது அலி ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் எடுத்த ஆண்டு எது? **1960**
18. ஒலிம்பிக் வளையங்களின் நிறங்கள் எவை?
    பச்சை, சிகப்பு, மஞ்சள், நீலம், கறுப்பு
19. பெண்கள் இடையில் அணியும் அணிகலன்கள் ஐந்து தருக?
    விரிசிகை, கலாபம், பருமம், மேகலை, காஞ்சி
20. இரண்டு எண்களில் எழுதக் கூடிய அதிகூடிய பெறுமதியை உடைய எண் எது? **99**

தொகுப்பு: *-சீலன் ஜயாத்துரை, seelan y2k@email. com*

## மாணவர் பகுதி



-S.F. Xavier (ஆசிரியர்)



**Answers to Tutorial 47**


February 01. 00

Ans1. Container should be filled 90% of the heigh

$= {}^{90}/_{100} \times 38.5, = 34.65$

It should be filled up to 35 cm.

Ans 2. After folding each side will be 3 cms. Hence the original side will be 6 cm. ∴ Area = 6 X 6 = 36 $cm^2$




**Ans 3.** $\dfrac{\pi \times 30 \times 30 \times h}{\pi \times 5 \times 5 \times h}$ = 36 cylinders

Ans 4. Volume of the box = 2 x 5 x 6

= 60 $cm^3$

Ans. 5. $\int x^5 / x^3 - 1 \; dx$

$= \int ( x^2 + x^2 / x^3 - 1) \, dx$ [By dividing $x^5$ by $x^3-1$]

$= \int x^2 dx + \int x^2 / x^3 - 1 \, dx,$

$= \int x^2 dx + \int {}^1/_3 \, d(x^3 - 1)/(x^3 - 1)$

$= {}^1/_3 x^3 + {}^1/_3 \log_e (x^3 - 1) + c$

## Tutorial 48

1. If a car goes at 30 mph for one mile and another mile at 40 mph. What is the average speed for the 2 miles.
2. If 10% of x is equal to 25% of 16. what is the value of x.
3. A cube rests inside a sphere, so that each vertex touches the sphere. Find the volume of the cube if the radius (coner) of the sphere is 6 cm.
4. Find the sum to n terms of 4 + 9 + 17 + 28 + 42 + 59 +.....
5. $\int x^6 dx$
6. $\int x^2 e^{3x} dx$
7. What is the probability that there are at least two people with the same birthday in a class of 40 students.
8. Estimate the probability that at least two of the next ten Prime Minister Canada will be born in the same Year.

By. **Mr. S.F. Xavier** (Teacher) **Tel:** (416) 431-6774


**Aruna Food**

EAST WEST INDIAN AND CANADIAN GROCERIES
* துரித பணமாற்றுச் சேவை
* VIDEO CONVERT SYSTEM

நாங்கள் எந்த மலிவு விலையையும் சமன் செய்வோம்.

**அருணா பூட்**

3585 Keele Street, Unit 11
North York, Ont. M3J 3H5
Tel: 416- 638-9554
Fax: 416- 638-9584

**பிரத்தியேக வகுப்புக்கள்**

MARKHAM RD/LAWRENCE
GRADE 1 - GRADE 5
ENGLISH, SCIENCE, MATH & TAMIL
வீட்டில் போதிக்கப்படும். பட்டதாரி ஆசிரியர். பலவருட சொந்த நாட்டு அனுபவம் உடையவர். வசதியான நேர வகுப்புகளுக்கு தொடர்புகொள்க
ஸ்ரீ / தேவி - 289-7808

**TUITION**

MCCOWAN /STEELES
பகுதியில் சிறுவர்களுக்கு அனுபவம் வாய்ந்த ஆசிரியையினால் வீட்டில் இருந்து பாடங்கள் கற்பிக்கப்படும்
தொடர்புகளுக்கு: (905) - 471-0046

**TUITION**

MATH TUTORஆன B.Sc. பட்டதாரி ஆசிரியரால் Grade 13 வரை Tuition வழங்கப்படுகிறது.
PL. CALL: Sri (416) 744-7596

**TUITION**

EXPERIENCED TEACHER IN MATH GIVING TUITIONS (INDIVIDUALLY AND GROUP OF NOT MORE THAN 5 IN A GROUP) IN FINITE MATH, CALCULUS AND ALGEBRA & GEOMETRY FOR O.A.C AND MATH FOR GRADE 6 -12
PL. CALL: (416) 431-6774

**TUITION**

அனுபவம் வாய்ந்த தரமான முதுகலை (M.A.) பட்டதாரி ஆசிரியையினால் KINDERGARDEN இலிருந்து Grade 6 வரையிலான பிள்ளைகளுக்கு Tution சொல்லிக் கொடுக்கப்படும்
PL. CALL: 264-9471

**TUITION**

ENGLISH & FRENCH TUTORING AVAILABLE FOR ALL AGES BY EXPERIENCED TUTOR, SPECIALIZED IN LANGUAGE, FLEXIBLE HOURS AND REASONABLE RATES.
PL. CALL: (416) 298-2434 / (905) 954-0528

நகரின் மத்தியில் பெரியதோர் தமிழ் நிறுவனம்

**செறன்டிப் (F) பிறஸ் மார்க்கட்**

நாளாந்த பாவனைக்கு தேவையான சகல பொருட்களையும் நாளாந்தம் மலிவு விலைகளில் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்






